


# முத்திதழ்

MUTHTHITHAL

මුත්තිදළ්

நீ. நான்.. நாம்...

சிற்றிதழ் : 07
அக்டோபர் – நவம்பர் 2021
REG.NO : MUPS/TL/2021/0949
ISSN 2806-5123

முதுசத் தொகுப்பு



## கட்டட நிர்மாணத்தின் அதிசயம்

## உள்ளத்தை முகாமை செய்தல்

## மூதூரில் முதல் நீதிபதியாகிறார்

முகம்மது கரீம் முகம்மது ஹில்மி

ரூ. 70/=

மாதாந்த சிற்றிதழ்

மாதாந்த இதழ்

# முத்திதழ்

முத்துப்படைப்புகளின் தொகுப்பு

SCAN ME

Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk

எம்மவர் ஆளுமைகளின் அடையாளம்

www.muththizhal.com +94 740818782 Mutur Muththizhal





## முத்திதழ் மாதாந்த சந்தா விபரம்

முத்திதழ் நீ.. நான்.. நாம்...

**முத்திதழ் சஞ்சிகை இனிவரும் நாட்களில் நாடளாவிய ரீதியில் விநியோகம் செய்யப்படவுள்ளது.**

மூதூர் மண்ணிலிருந்து வெளிவரும் "முத்திதழ்" மாதாந்த சிற்றிதழை இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள முடியும் என்ற மகிழ்ச்சியான செய்தியை எமது வாசகர்களுக்கு நாம் அறியத்தருக்கின்றோம்.

### இதழ் ஒன்றினை அஞ்சல் மூலமாக பெற்றுக்கொள்ள.

- மாதம் ஒன்றுக்கு – 100.00 ரூபாய்
- 6 மாத சந்தா – 580.00 ரூபாய்
- வருட சந்தா – 1100.00 ரூபாய்

எமது இதழை பெற்றுக்கொள்ள

**0771663140**

என்ற இலக்கத்திற்கு அழைப்பினை ஏற்படுத்துங்கள்.

மின்னிதழ் பெற்றுக்கொள்ள #Mutur_Online_Library என்ற WhatsApp குழுமத்தை தொடர்புகொள்ளுங்கள்.





# Mutur Baby Care

A Destination for Child Care

- பேபி கூடை
- பேபி நப்கின்
- பேபி சட்டை
- தொப்பி சொக்ஸ்
- தொப்புள் கிளிப்
- பேபி கிறீம்
- பேபி குலோன்
- பேபி பவுடர்
- பேபி சோப்
- பவுடர் கேஸ்



Main Street, Mutur - 01 / 0772258658 / 0757577521 / 0751766666

# முத்திதழ்

நீ, நான்.. நாம்...

**இதழ்-07, அக்டோபர் /நவம்பர் 2021**






Pages - 20
Size - A4
Location - Mutur
Category - Magazine
Layout By - Sanoos.tm
Adz Partner - MP News

**Online Mutur Library**



Contact - +94 740818782
Gmail - muththizhal.lk@gmail.com
Social Media - Muththizhal
Address - Jaya Road, Mutur.



**பிரதம ஆசிரியர்**
JUNAID MOHAMED IHSHAN

**பணிப்பாளர் சபை**
Abdul Cader Mohamed Asmy
Ajees Mohamed Rajees
Niyas Aasha Falin

**ஆலோசனைக் குழு**
*M.S. Amanullah (Retd. Principal)*
*Dr. A. Sathees Kumar (MBBS)*
*Ashseikh N.M. Nisath (Naleemi)*
*A.S. Mubarak (Retd. Librarian)*
*Mrs. Susana Munas (Teacher)*
*Mr. W. Mohamed Asmy*


**Rs : 70/=**


05 **குழந்தைகளின்** மனோநிலை - Dr. Hasan Subiyan

08 **மார்பகப்** புற்றுநோய் - Sameem Kanzul Fazeen

12 **உள்ளத்தை** முகாமை செய்தல் - Nakeeb Nisath

16 **கிரிப்டோகரன்சி** Cryptocurrency - A.M. Ramzan

08 **அரபா நகர் பாலம்** ஆபத்தான நிலையில்... - J. Mohamed Ihshan

17 **கிண்ணியா** படகு விபத்து - Buhary Naleer



16 **கிரிப்டோகரன்சி** Cryptocurrency - A.M. Ramzan



**ICC World Cup** T20-20





07 **பிரமிட்டுக்கள்** கட்டட நிர்மாணத்தின் அதிசயம் - N. Aasha Falin

## ஆசிரியர் மடல்

கொரோனா தோற்றுதலை தொடர்ந்து நாடு சுமூகமான நிலைக்கு திரும்பிவந்துள்ளது. தற்போது நாட்டின் பெரும்பாலான பாடசாலைகள் மீள் ஆரம் பிக்கப்பட்டு கல்வி நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றமை வரவேற்புக்குரியது.


மூதூர் பிரதேசத்தை பொறுத்தமட்டில் நாட்டில் இயல்பு நிலைபோன்ற நிலைமை நிலவியபோதிலும் வருடத்தின் இறுதி மாதம் என்பதனால் மாரிகாலம் தொடங்கியுள்ளது. இந்நிலையில் மூதூரில் அங்காங்கே டெங்கு நோய் தொற்று அடையாளம் காணப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து மூதூர் பொது சுகாதார பணிமனையினால் சுற்றாடலை தூய்மையாக வைத்திருக்கவும், டெங்கு நோய் அபாய எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. மேலும் பிரதேச செயலக மட்டத்தில் கிராம சேவகர் பிரிவில் டெங்கு தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதை அவதா னிக்க முடிகின்றது.

சீரற்ற காலநிலை காரணமாக மூதூர் தக்வா நகர், கபீப் நகர் பகுதிகளைச் சார்ந்த கரையோரப் பகுதிகள் அதிகம் கடல் சீற்றத்திற்கு இரையாக்கப் பட்டு வருகின்றன. இந்நிலையில் கடலில் கல்வேலிகள் போட்டும் இதுவரை எதிர்பார்த்த தடுப்பு விளைவுகள் பெறப்படவில்லை. இதனால் மீனவர்கள் தங்கள் மீன்பிடி படகுகளை பாதுகாப்பாக தரித்து வைப்ப தற்கு பாரியதொரு சவாலாக உள்ளது.

பெரும்போக விவசாய செய்கையில் விவசாயிகள் அதிகம் கவனம் செலுத்திவரும் நிலையில் சேதனப் பசளை பெற்றுக்கொள்வதில் பாரியதொரு சவாலை உள்ளூர் விவசாயிகள் எதிர்நோக்கியுள்ளனர். இதற் காக மூதூர் பிரதேச சபை, மூதூர் பல்நோக்கு கூட்டு றவுச் சங்கங்களுக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் பரிந்துரைகளுக்கு அமைவாக உள்ளூரில் சேதனப் பசளை உற்பத்தி நடவடிக்கைக்கான ஆயத்தம் நடை பெறுவதாக அறியக்கிடைத்துள்ளது. மேலும் மூதூர் மண்ணில் பல்வேறு கிராமசேவகர் பிரிவில் காணப்படும் வீதிகள் புனரமைப்பு செய்யப்படுவ தையும், வீதிகளுக்கான வடிகான்கள் அமைக்கப்படு வதையும் காணமுடிகின்றது.

23.11.2021 ஆம் திகதியன்று கிண்ணியா குஞ்சாக்கேணி தற்காலிக பாதை சேவையில் ஏற்பட்ட விபத்தில் 07 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன. இதே வேளை பொதுமக்கள் வீதியில் டயர் எரிப்புசெய்து தங்களின் ஆதங்கங்களை வெளிப்படுத்தியதோடு பாராளுமன்ற உறுப்பினர் வீடு, பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபை முன்பாக தங்களின் உரிமை தொடர்பில் சலசலப்பையும் உண்டாக்கியதாக அறியக் கிடைத்துள்ளது. இதுபோன்றதொரு அசம்பாவிதம் ஏற்படும் அச்சுறுத்தல் நிலையில் மூதூர் வேதத்தீவு பாதை போக்குவரத்து அமைந்துள்ளதாக சுட்டிக்கட்டு கின்றோம்.

வெகுவாக உள்ளூரில் அரிசி, சீனி மற்றும் ஏனைய அத்தியாவசிய உணவுப்பொருட்கள் நிர்ணய விலையை விட அதிகமாக விற்பனையா வதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். பெற்றோல், டீசல் போன்றவற்றுக்கு தட்டுப்பாடு ஏற்படும் என்ற சந்தேகத்தில் பொதுமக்கள் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நெரிசல் நிலையில் காணப்படுகின்றது. ஆனால் மூதூர் பல்நோக்கு கூட்டுறவு சங்கத்தினால் எரிபொருள் தொடர்ச்சியாக வழங்கமுடியுமென்று அறிவுறுத்தல் அளிக்கப்பட்டுள்ளது.




# ஆசிய சாதனை புத்தகத்தில் கிரேன் மாஸ்டர் (Grand Master) பட்டத்தை பெற்று

# மூதூர் சிறுமி வரலாற்றுச் சாதனை

எம். எப். ஆயிஷா இனாரா எனும் நான்கு வயது 03 மாத சிறுமி ஆசிய சாதனை புத்தகத்தில் (ASIAN BOOK OF RECORDS) சாதனை யாளராக தெரிவு செய்யப்பட்டு கிரேன் மாஸ்டர் (Grand Master) பட்டத்தைப் பெற்று மூதூருக்கும், மருதமுனைக்கும் முழு இலங்கைக்கும் பெருமையை சேர்த்துள்ளார்.



**2017 மே மாதம் 04 தேதி பிறந்த ஆயிஷா இனாரா** தனது பிஞ்சு வயதில் ஆசிய கண்டத்திலுள்ள நாற்பத்தி எட்டு (48) நாடுகளின் முழு பெயரினையும் மிக வேகமாக இருபத்திமூன்று செக்கன்களில் கூறி இந்த சாதனையை நிகழ்த்தி **கிரேன்ட் மாஸ்டர்** எனும் பட்டத்தை பெற்று முழு நாட்டிற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

இச்சிறுமி ஆசிய கண்டம், ஐரோப்பா கண்டம், அவுஸ்திரேலியா கண்டம் உட்பட 110 நாடுகளின் பெயர்களை 1 நிமிடத்தில் வேகமாகக் கூறுவார். 110 நாடுகளை உலக வரைபடத்தில் அடையாளம் காட்டுவதோடு ஆசிய கண்ட 48 நாடுகளின் தேசிய கொடியினையும் அடையாளம் காட்டுவார். பாடசாலை கல்வியில் கால் பதிக்காத இச்சிறுமி தமிழ் மொழியினை சரளமாக வாசிப்பதோடு விடுகதைகள் புதிர்களை தேடி அறிவதிலும் விருப்பம் கொண்டவர்.



**இவ்வாறு பல திறமைகளை தன்னகத்தே கொண்ட இந்த சிறுமி மூதூர் அரபுக்கல்லூரி வீதியை பிறப்பிடமாகவும் மருதமுனையை வசிப்பிடமாகவும் கொண்ட மௌலவி எஸ்.முஹம்மது புர்கான் (நத்வி) ஆசிரியரினதும் மருதமுனையைச் சேர்ந்த விசேட கல்வி ஆசிரியையான ஏ.ஆர். பாத்திமா நதா ஆகியோரது சிரேஷ்ட புதல்வியாவார்.**

இந்த சாதனையை நிகழ்த்திய சிறுமியை பிரதேசத்தின் கல்வியலாளர்கள் பலரும் தற்போது பாராட்டி வருகின்றனர். இவருக்கான சான்றிதழ் மற்றும் பரிசு என்பன குறித்த நிறுவத்தின் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# முத்திதழ் வாழ்த்து



## மூதூரின் முதலாவது நீதவனாகத் தேர்வாகிறார் கரீம் முகம்மது ஹில்மி

மூதூரிலிருந்து முகம்மது கரீம் முகம்மது ஹில்மி சட்டவாளர் நீதிச் சேவை ஆணைக்குழுவினால் மூலமாக நீதவானாக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

சட்டத்தரணியாக சுமார் 09 ஆண்டுகளுக்கு மேலாக மூதூர் நீதவான் நீதிமன்றில் கடமையாற்றி வரும் இவர் மூதூர் மண்ணிலிருந்து நீதவானாக தெரிவு செய்யப்படும் முதன்மையாராகவும், மூதூரில் மிக இளம் வயதில் (36) நீதவானாக தெரிவு செய்யப்படும் முதலாமவராக வரலாற்றில் இடம்பிடித்துள்ளார்.

மூதூர் மத்திய கல்லூரியின் பழைய மாணவரான இவர் தனது ஆரம்பக் கல்வியையும்,உயர்தர கல்வியையும் தி/மூ/மூதூர் மத்திய கல்லூரி தேசிய பாடசாலையில் உயர்தரத்தில் கலைப்பிரிவில் கற்று 2004 ஆம் ஆண்டு வெளியாகிய உயர்தரப் பரீட்சை பெறுபேற்றின் மூலம் கொழும்பு பல்கலைக் கழகத்தின் சட்ட பீடத்திற்கு தெரிவாகி ஒரு சட்டத்தரணியாக வெளியானார்.

தற்போது திறந்த பல்கலைக் கழகத்தில் சட்ட முதுமாணிக் கற்கை நெறியினைப் பூர்த்தி செய்யும் தருவாயில் உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவரின் சேவைகள் நீதித்துறையில் விஸ்தீரணம் அடைய இறைவன் துணையளிக்க முன்கூட்டிய வாழ்த்துகளை முத்திதழ் சஞ்சிகை சார்பிலும் மூதூர் மக்கள் சார்பிலும் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

## முதலாமிடம் பெற்றார் சைத் குஸ்னிீப்



மூதூர் பிரதேச செயலகத்தினால் 2021 நடாத்தப்பட்ட சிறுவர் தின சித்திரப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தினைப் பெற்றுக்கொண்டதோடு சிறுவர் மலர் அட்டைப் படத்திற்கும் தெரிவாகிய பாலத்தோப்பூர் ஷாஹிரா பாடசாலையில் தரம் 5 இல் கல்வி பயிலும் சும்ரி சைத் குஸ்னிகப் அவர்களுக்கு மூதூர் பிரதேச செயலாளர் எம்.முபாரக் அவர்களினால் கடந்த (10) சான்றிதழும் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டது.

சிறுவர் சித்திரப்போட்டியில் வெற்றிபெற்ற இம்மாணவருக்கு முத்திதழ் சார்பிலான வாழ்த்துகள்.






## புலமைப்பரிசில் பரீட்சை பரிசளிப்பு விழா

மூதூர் ஜாயா வித்தியாலயத்தில் 2020ம் ஆண்டுக்கான ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா கடந்த (06) மூதூர் சஹ்றா மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மூதூர் அதிதிகளாக மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் பிரதேச சபைத் தவிசாளர் எம்.ஏ.அரூஸ், வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி முனவ்வரா நளீம் ஆகியோரோடு பாடசாலை அதிபர் வி.முஸ்ஸமில், ஆசிரியர்கள், பெற்றோர்கள் கலந்துகொண்டு சித்திபெற்ற மாணவ மாணவிகளையும் கற்பித்த ஆசிரியர்களான எம்.ஐ.எம்.அனஸ், திருமதி பஸ்மிலா நவ்பார் அவர்களுக்கும் கௌரவிப்பு நிகழ்வையும் நடத்தினர்.

2020 ஆம் ஆண்டு மூதூர் வலயத்தில் வரலாற்று சாதனையாக 23 மாணவர்கள் புலமை பரிசில் சித்தி பெற்றதோடு வலயத்தில் 100% சித்தியும் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.



# நேர்காணல்

நேர்கண்டவர் : இஹ்ஸான் ஜே.எம்.ஜ

- பெயர் : முஹம்மது சௌமி கரீம்
- பிறப்பு : 25-12-1977
- பதவிநிலை : அதிபர்,அரபு மொழி விரிவுரையாளர்
- பிரதேசம் : மூதூர்
- தந்தை : முஹமது சுல்தான் கரீம்
- தாய் : மெஹ்ரூன் நிஷா
- வேறு துறை : சமூக சேவையாளர்

" சர்வதேச அளவில் இஸ்லாமிய சட்டவியல், பத்வா, மொழியியல் துறையில் இலங்கை சார்பான பங்களிப்பை அளிக்கும் மூதூர் மண் ஈன்றெடுத்த ஒரு ஆளுமையே எமது இன்றைய நேர்காணலில் சந்திக்கின்றோம். சிறந்த வாசிப்பாளனும் பிரபல அரேபிய பத்திரிகையின் தொடர் எழுத்தாளனும் மற்றும் புத்தாக்க சிந்தனை மையத்தின் நிறுவனருமாக தன்னை அடையாளப்படுத்தியுள்ளார் "



**ஓர் ஆளுமை மனித வளமாக திகழும் உங்களைப் பற்றிய அறிமுகத்தை கூறமுடியுமா?**

அகில இலங்கை ஹையதுள் குர்ஆன் அதிபராகப் பணியாற்றும் நான் அகில இலங்கை பத்வா குழுவின் உறுப்பினராகவும், புத்தாக்க சிந்தனை மையம் என்ற அறிவுசார் நிறுவனத்தின் பணிப்பாளராகவும், இலங்கையின் பல்வேறுபட்ட அரபு மத்ரஸாக்களின் ஆசிரியராகவும் தற்போது பணியாற்றி வருகின்றேன்.

குறிப்பாக மனிதவள மேம்பாடு தொடர்பான பயிற்சிவிப்பாளராக நாடளாவிய ரீதியில் ஆசிரியர்கள், மௌலவிகள், மாணவர்கள், பெண்கள் என்று பல்வேறு பட்ட தரப்பாரை இலக்குக் குழுவினராக கொண்டு எனது பங்களிப்பை அண்மைக் காலங்களில் அளித்துவருகின்றேன்.

சர்வதேச ரீதியில் அரபு மொழி சார்ந்த உலக ஒன்றியத்தின் இலங்கை சார்பிலான உறுப்பினராக கடந்த மூன்று ஆண்டுகள் மேலாக பணியாற்றுவதோடு இஸ்லாமிய சட்டவியல், பத்வா குழுவின் கூட்டமைப்பிலும் அங்கத்துவம் வகிக்கின்றேன்.

**சர்வதேச அளவில் உங்களை தொடர்புபடுத்திய பின்னணி எது?**

கல்வி என்றுதான் கூறவேண்டும் எனது தாய், தந்தையின் ஊக்குவிப்பு காரணமாக அதிக நாட்டம் வாசிப்பு, தேடலில் சிறு வயது தொடக்கம் இருந்தது. மூதூரில் 1-5 ஆம் ஆண்டுவரை அந்தோனியா பாடசாலையிலும், 6 தரம் கோணேஸ்வரா இந்து கல்லூரியிலும், 7 ஆம் தரம் அல்ஹிலால் பாடசாலையிலும் பின்னர் இஸ்லாமிய கற்கைக்காக குல்யதுள் ரஷாதியா அரபு கல்லூரியில் 8 வருடங்கள் எனது கற்கையைத் தொடர்ந்து ரஷாதியா பட்டம் பெற்றதோடு ஹதீஸ் துறையில் விசேட கலையும் நிறைவு செய்தேன்.

புனித அல்-குர்ஆன் மனனம் செய்வதற்காக பாகிஸ்தான் 2000-2001 ஆம் காலப் பகுதியில் சென்றிருந்தேன். பின்னர் கலைமானி பட்டத்தை எகிப்து அல்அஸ்ஹர் சர்வதேச பல்கலைக் கழகத்தில் முடித்தேன். பின்னர் தாருல் இப்தா மிஸ்ரியாவில் முப்தி பட்டம் பெற்றேன்.

இந்நிலையம் முழு உலகத்துக்கான பத்வா வழங்கும் நிலையமாக தொழிற்பட்டு வருகின்றது. மேலும் அல் மஃஹதுல் ஆலி லித்திராஸாதில் இஸ்லாமிய்யாவில் ஷரீஆத் துறையில் டிப்ளோமா பட்டத்தையும் நிறைவு செய்துள்ளேன். ஜாமிஅதுல் மலிக் ஸூவூத் பல்கலைக் கழகத்தில் அரபுமொழி ஆசிரியர் பயிற்சிப் பட்டறையில் கற்றேன்.

இவைகளே என்னை சர்வதேசரீதியில் தொடர்புடையவனாக மாற்றியது.

**நீங்கள் உங்கள் கல்வி வளத்தை கொண்டு ஆற்றுகின்ற பணிகளை எம்முடன் பகிர்ந்துகொள்ள முடியுமா?**

வாசிப்பு கலாசாரத்தை மேம்படுத்துவதே ஈது பிரதான வாழ்வியல் குறிக்கோளாக இன்றளவும் இருந்துவருகின்றது. இதற்காக பல முயற்சிகளைச் செய்து வருகின்றேன்.

இதன் பிரதான அங்கமாக 2016 ஆம் ஆண்டு "புத்தாக்க சிந்தனை மையம்" என்ற நிறுவனத்தை உண்டாக்கினேன். இதில் பல்வேறு அரபு மதரஸாக்களில் கல்வி பயின்ற ஆலிம்களை உள்வாங்கியுள்ளேன். இந்நிறுவனத்தினூடாகவே எனது சமூக பணிகளை மேற்கொண்டு வருகின்றேன். குறிப்பாக,

- உலமாக்களுக்கு அறிவுசார், ஆளுமை சார் ரீதியிலான பயிற்சி முகாம்களை நடாத்துதல்.
- ஆளுமை, வாய்மை விருத்தி தொடர்பான பயிற்சி பட்டறைகளை நாடளாவிய ரீதியில் ஒழுங்கு செய்வது.
- வியாபர வழிகாட்டல், பொருளாதார ஊக்குவிப்புகள் திட்டங்களை நடைமுறைப் படுத்தியுள்ளோம்.
- மார்க்க சட்ட வழிகாட்டல், மொழியியல் ரீதியிலான பயிற்சி கருத்தரங்குகள், மாணவர்களுக்கான வழிகாட்டல் செமினார்கள் நடத்தியுள்ளோம்.
- குறிப்பாக வாழ்வாதார ஊக்குவிப்புகளை வருடாந்தம் அளித்துவருகின்றோம்.

**மூதூரின் துறைசார் நிபுணத்துவம் கொண்ட மானிட வளங்களில் ஒருவரான நீங்கள் துறைசார் ரீதியிலான செயற்பாடு எந்த அளவிற்கு வியாபித்துள்ளது தொடர்பில் உங்கள் கருத்து?**

சர்வதேச ரீதியில் எட்டு வெளிநாட்டு பல்கலைக்கழகத்தில் தலைமைத்துவ பயிற்சிகளை செய்துள்ளேன். அரபு மொழிகள் சார்ந்த மாநாடுகளில் இலங்கை சார்பாக கலந்துகொண்டு ஆலோசனைகளையும், கருத்துகளையும் பதிவு செய்துள்ளேன். ஷரீஆத் துறைகள், அரபு மொழி சார்ந்த உலக நாடுகளின் ஒன்றியத்தில் இலங்கை முஸ்லிம் சமூகம் சார்பிலான தனித்துவத்தை பதிவு செய்கிறேன்.

குறிப்பாக சவூதி அரேபியா ஜாமிஆ ஸூவூதியாவிலிருந்து வெளிவரும் ரிஷாலா அல்-ஜாமியாஹ் பிரபல அரபு பத்திரிகையில் தலைப்புவாரியாக ஆக்கத்தினை எழுதி வருகின்றேன்.

**இறுதியாக மூதூர் சமூகம் தொடர்பான உங்களின் நிலைப்பாடு என்ன?**

மனித ஆளுமைகளை பிறப்பிக்கும் பிரதான முஸ்லிம் ஊர்களில் மூதூர் முதன்மையானது என்றுதான் நான் கருதுகின்றேன். ஏனெனில் இலங்கையின் பல பாகங்களில் மூதூரை பிறப்பிடமாகக் கொண்டவர்கள் நல்ல நிலைமையில் பணியாற்றுகின்றார்கள்.

இதனால் மூதூர் மனித ஆளுமைகளை பிறப்பிக்கும் ஊர் என்றும் சொல்ல முடியும். இதனால்தான் உள்ளூரில் இருக்கும் மனித வளங்கள் தொடர்பிலான பெறுமதிகள் எமது ஊரார் அறிவது கடினமாக உள்ளது.

எமது ஊரை மேம்படுத்துவதற்காக துறைசார் வளங்களைக்கொண்ட மனித ஆளுமைகளை ஒன்றிணைப்பு செய்ய வேண்டிய தருணத்தில் உள்ளோம். இதனூடாக எதிர்கால சந்ததிக்கு வழிகாட்டிட முடியும்.

இறுதியாக... உலகத்தில் நிறைய மனிதர்கள் தாங்கள் யார் என்றுகூட தெரியாமல் வாழ்ந்து மரணிக்கின்றார்கள். எனவே எமது மரணத்தின் பின்னர் நமது அடையாளத்தை விட்டுச்செல்ல ஒவ்வொருவரும் முயற்சித்தாலே போதும் ஒரு சமூகத்தை மேம்படுத்த.



# மூளை வளர்ச்சி குறைந்த, மன நிலை பாதிக்கப்பட்ட


**Dr.Subiyan MBBS(SL),**
Fellowship in Diabetes Mellitus(Ind),
Diploma in Psychology(SL),
Rehabilitation Hospital,
Digana.




## குழந்தைகளும் எமது மனநிலையும்

ஒருவருக்கு கிடைக்க கூடிய செல்வங்களில் முதன்மை பெறு வது குழந்தை செல்வமென்றால் அது மிகையாகாது. அதிலும் நாம் எதிர்பார்ப்பது போன்ற குழந்தைகள் அமைந்துவிட்டால் மகிழ்ச் சிக்கு அளவில்லை. இருந்த போதும்,

பெற்றோரின் பரம்பரை, கர்ப்ப காலம், பிரசவ நேரம் போன்ற வற்றில் ஏற்படுகின்ற பிரச்சினையால் இவ்வாறான மூளை வளர்ச்சி குறைந்த, மனநிலை பாதிக்கப்பட்ட குழந்தைகள் பிறக்கின்றன.

ஆரோக்கியமாக பிறந்தாலும் பின்னர் வளரும் காலத்தில் ஏற்படுகின்ற நோய் தாக்கங்கள், குடும்பம், சூழலியல் இவ்வாறான பிள்ளைகள் உருவாக வழி வகுக்கிறது.



மூளை வளர்ச்சி குறைந்த/மன நிலை பாதிக்கப்பட்ட குழந் தைகள் யாரும் விரும்பி பெறுவதோ/கிடைப்பதோ அல்ல. இறைவன் நம்மை சோதிப் பதற்காக இவ்வாறான குழந்தை களை தந்துள்ளான் என்பதை எம் உள்ளத்தில் ஆழமாக பதிக்க வேண்டும். இதை வேறும் வார்த்தைகளால் எழுதிவிடுவது இலகு .இதை ஏற்றுக்கொள் வது மிக மிக கடினம்.

ஏற்கனவே கூறிய படி பல்வேறுபட்ட காரணங்களால் இவ் வாறான குழந்தைகள் பிறக்கின்றன/ உரு வாக்கப்படுகின்றன. இதனுடன் சம்பந்தப் பட்ட ஒரு சில விடயங் களை எழுதுகிறேன்.

### DOWN SYNDROME :

பெற்றோர்களின் நிற மூர்த்தங்களின் மாற்றத் தினால் உரு வாகும் குழந்தை களாகும். தாயின் பிந்திய வயதில் உருவாகின்ற குழந்தை களே பெரும்பாலும் இவ்வாறான மாற்றத்திற்கு உள்ளாகின்றனர். இதை தவிர வேறு காரணங்களும் உண்டு. இவர்கள் எந்த நாடுகளில் பிறந் தாலும் இவர்களின் தோற்றம் Mongolian நாட்டை ஒத்த முகத்தோற்றம் உள்ளதால் Mongolism Child என அழைக்கப்படுகிறார்கள். ஆயிரத்தில் ஒரு பிள்ளை இவ் வாறான பிள்ளைகளாக பிறப்பதுடன் தாயின் வயது 35ஐ தாண்டும் போது இதன் நிகழ்தகவு அதிகமாகும்.

- 15-29 வயது 1:1500
- 30-34வயது 1:800
- 35-39வயது 1:270
- 40-44வயது 1:100
- 45வயது 1:50

இவர்களுக்கு பல்வேறுபட்ட மருத்துவ பிரச்சினைகள் இருந் தாலும் புத்தி குறைவாகவும் (Mental Retardation) காணப்படு வார்கள்.

### AUTISM (மன இறுக்கம்) :

இது மிகவும் விரிவான பகுதி. சுருக்கமாக சொல்வதென்றால் நரம்பு நடத்தை வேறுபாட்டு மாற்றத்துடன் சமூக தொடர்பு, தொடர்பாடல் போன்றவற்றில் ஏற்படுகின்ற கடினத்தன்மையுட னான தொடர்பாடல் சவாலை எதிர்நோக்குவதுடன் ஒரு விட யத்தை மீண்டும் மீண்டும் செய்ய வேண்டுமென்ற எண்ணமுடைய குழந்தைகளாகும்.

### ATTENTION DEFICIT HYPERACTIVITY CHILDREN

**(கவன குறைபாட்டுடன் அதிக இயக்கமுள்ள குழந்தைகள்) :**

இவர்கள் சாதாரண குழந்தைகளை விட எந்நேரமும் இயங்கி கொண்டே இருப்பார்கள். இவர்கள் எந்நேரமும் பேசிக் கொண்டும், கை கால்களை அசைத்து கொண்டும், தூக்கமின்மை, அவதான குறைவு, எந்தவித யோசனையுமின்றி செயல்படல், பயமின்மை, வகுப்புகளில் பகல் கனவு, ஞாபக குறைவு போன்ற இயல்புகளுடை யவர்களாக இருப்பார்கள்.

இதை தவிர Cerebral Palsy, மனநிலை பாதிக்கப்பட்ட வர்கள் (Psychiatric Disorder) போன்ற பல்வேறுபட்ட பிரச்சனைகளு டைய பல குழந்தைகளை சமூகத்தில் காணலாம். இவ்வாறான குழந் தைகளால் தனிப்பட்ட, குடும்பம், சமூகம் சார்ந்த பல்வேறு பட்ட பிராச்சனைகளுக்கு முகம் கொடுக்க நேரிட வேண்டிவரும்.

**தனிப்பட்ட பிரச்சனைகள் :**

இவர்களில் பெரும்பாலனவர்கள் தமது அன்றாட தேவைகள் அனைத்தும் இன்னொருவரிலே தங்கியிருப்பார்கள். இதிலும் சிலர் சிறுநீர், மலம் போன்றவை கூட இவர்களுக்கு தெரியாமலே வெளி யாகிறது. சில பெண் பிள்ளைகள் பருவ வயதை அடைந்து மாதவிடாய் சம்பந்தமாக கூட எவ்வித உணர்வோ/அறிவோ இல்லை. இரத்தம் உடைகளில் பட்டு வேறொருவரின் மூலமே அடையா ளப்படுத்தப் படுகின்றது. இதை தவிர இவ்வாறான பேச முடியாத பிள்ளைகளை பாலியல் துஷ்பி ரயோகம் செய்யும் காம வேட்டையர் களும் உள்ளனர்.

**குடும்ப பிரச்சனைகள் :**

இப்படியான குழந்தைகளுடைய பெற்றோர்களின் அனேகமான நேரங்கள் இவர் களுடனே செலவழிக்க வேண்டிவரும். இதனால் மற்றைய பிள்ளைகளுக்கு கல்வி உட்பட பலவிடயங் களுக்கு போதியளவு ஈடுபடுத்த முடியாது. இவர்களால் வயதாகி னாலும் தினமும் பயன் படுத்தக்கூடிய Pampers உற்பட பல மேலதிக செலவுகள். குடும் பத்தில் இருவரும் உத்தியோகமென்றால் ஒருவர் இவர்களை பராமரிப்பதற்காக வேலையை விட்டு நிற்க வேண்டி வரும்.

குறிப்பாக இவர்களின் தாய் இவர்களால் குடும் பத்தின் நெருங்கி யவர்களின் திருமண, மரண வீடுகளை கூட தியாகம் செய்ய வேண்டி வரும். பெரும்பாலும் இவர்களின் வாழ்க்கையில் சந்தோசம் மிக தூரத் தில்தான். வீட்டிலுள்ள பொருட்களை உடைத்தல், சகோதரர் களுடன் சண்டை, Burn Injury, Gas-Fire போன்ற பல சவால்களுக்கும் முகம் கொடுக்க வேண்டி வரும். சில குடும்பங்களில் இவ்வாறான பிள்ளை கிடைத்தால் அதனுடன் பிள்ளை பெறுவதை நிறுத்தி விடுவார்கள்.

**சமூக பிரச்சனைகள் :**

அயல் வீட்டாருடன் சண்டை, எந்நேரமும் சத்தமிடுவதால் பலருக்கு தொந்தரவு, பொருட்களை திருடல், பாடசாலையில் பிரச்சினை போன்ற பலவற்றை கூறலாம். இது போன்ற பிள்ளைகள் இவற்றை யெல்லாம் தாம் விரும்பி செய்வ தில்லை. இவர்களில் பெரும்பாலான வர்கள் மூளை வளர்ச்சி குறைபாடு காரணமாக தாம் என்ன செய்கிறோம் என தெரியாமல் செய்கிறார்கள். எனவே குடும்பத்திலுள்ளவர்கள், சமூகத்திலுள்ளவர்கள் ஒருபோதும் இவர்களை சுமையாக கருதகூடாது.

குடும்பத்திலுள்ளவர்கள் பல வருடங்களாக எவ்வளவு தியாகத் துடன் வாழும் போது சில வேளை இவர்களை வெளியே கூட்டி செல்ல நேரிடும்போது அந்த குறித்த நேரத்தில் இக்குழந்தைகளால் ஏதாவது பிரச்சனைகள் ஏற்பட்டால் இவர்களின் பெற்றோருடன் சண்டை பிடிப்பவர்களும் இன்றைய சமூகத்தில் உள்ளனர். எனவே இவர்களும் மனிதர்கள். இவர்களுக்கு தெரியாமல் செய்கின்ற உணர்வுகளுக்கு நாம் மதிப்பு வழங்க வேண்டும்.

இவ்வாறான குடும்பங்களுடன் சண்டை பிடிப்பவர்கள், தேவை யில்லாத கதைகளை சொல்பவர்கள் ஒரு விடயத்தை ஞாபகம் வைத்து கொள்ள வேண்டும். இன்று அவர்களுக்கென்றால் நாளை நமக்கோ அல்லது நமது உறவினர்களுக்கோ இவ்வாறான குழந்தை களை பெறலாம்.

எனவே இப்படியான குழந்தைகளை பெற்றவர்கள் இறைவன் தந்த பாக்கியமாக கருதுவதோடு இவர்களை வைத்து நகைச்சு வையோ அல்லது இவர்களை வைத்து பொழுதுபோக்கு கடத்தாமல் சமூகத்தி லுள்ள ஏனையவர்களும் இறைவனுக்கு நன்றி செலுத்தி அவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

# தலைப்புச் செய்திகள்




அ.வ. முஹ்ஸீன்



சிறுகதை

- **மற்றுமொரு பத்திரிகையின் தலைப்புச் செய்திகள்:**
- வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு ஜனாதிபதி நேரடி விஜயம்.
- குடும்பம் ஒன்றிற்கு ஐம்பதாயிரம் ரூபா வழங்க பணிப்பு.
- மக்கள் வெள்ளத்தினால் பாதிக் கப்பட்டி ருக்கையில் அமைச்சர்க ளுக்கு சொகுசு வாகனங்கள் எதிர்க் கட்சி குற்றச்சாட்டு.
- சொகுசு வாகன இறக்குமதிக்கு சென்ற வருடமே அமைச்சரவை அங்கீகாரம்
- அமைச்சரவைப் பேச்சாளர் எதிர்க் கட்சியினருக்கு பதிலடி.
- மேலும் இரண்டு விவசாயிகள் தற்கொலை
- விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு விசேட குழு அமைக்கப்படும் காணி, விவசாய அமைச்சர் கூறுகிறார்.

**மேலும் ஒரு பத்திரிகையில் இருந்து:**

- அரச எம்பிக்கள் ஐவர் எதிர்க்கட்சியில் இணைவு.
- இன்னும் பலர் கட்சி மாற இருப்பதாக தகவல்.
- எத்தனை பேர் கட்சி மாறினாலும் அரசாங் கத்தை அசைக்க முடியாது பிரதமர் உறுதி.
- மக்களின் ஆதரவுடன் ஆட்சி அமைப் போம். எதிர்க்கட்சித் தலைவர் நம்பிக்கை.
- அரச தொலைத்தொடர்பு நிறுவனம் பாரிய நட்டத்தில் இயங்குகிறது நிதி அமைச்சர் அறிவிப்பு.

**இன்னுமொரு பத்திரிகையின் தலைப்புச் செய்திகள்:**

- அடுத்த வாரம் தேர்தலுக்கான தினத்தை அறிவிப்பார் தேர்தல் ஆணையாளர்
- சிறுபான்மைக் கட்சிகளுடன் இணைந்து ஆட்சி அமைப்போம் எதிர்க்கட்சிப் பேச்சாளர்.
- மேலும் எட்டு அரச எம்பிக்கள் எதிர்க் கட்சியில் இணைவு.

**அடுத்த பத்திரிகையில் இருந்து:**

- "தேசிய நலன்பேணும் முன்னணி" உதயம்.
- எதிர்க்கட்சிகள் இணைந்து புதிய கட்சியில் போட்டி.
- அந்நிய சக்திகளுடனும் பாதாள உலகத் தினருடனும் இணைந்து நாட் டைக் குட்டிச் சுவராக்க எதிர்க்கட்சி முயற்சி ஜனாதிபதி ஆவேஷ உரை

**மற்றுமொரு பத்திரிகையில் இருந்து:**

- பிரதான அரசியல் கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் அடுத்த வாரம்.
- நாமே மீண்டும் ஆட்சியமைப்போம்!
- மோசடிகள் மூலம் ஆட்சியை மீண்டும் கைப்பற்ற சதி.
- எதிர்க்கட்சி கூட்டணி எச்சரிக்கை.
- நாட்டில் சமாதானம் மலர தேசிய நலன் பேணும் முன்னணிக்கு சிறுபான்மையினர் வாக்களிக்க வேண்டும்.

**பிறிதொரு பத்திரிகையில்:**

- ஏட்டிக்குப் போட்டியான பிரச்சாரக் கூட் டங்கள்.
- மேடைகளில் அரசியல் தலைவர்களின் ஆக்ரோஷப் பேச்சுகள்.
- சர்வதேச கண்காணிப்பாளர்கள் வருகை.
- நீதியான தேர்தல் உறுதிப்படுத் தப்படும் என அறிவிப்பு.
- எதிர்க்கட்சியினரின் தேர்தல் வாக் குறுதிகள் வெறும் ஏட்டுச் சுரைக்காய் ஜனாதிபதி கிண்டல்.
- என்ன செய்தேனும் ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்போம்!
- பொருட்களின் விலைகளைக் குறைப்போம்!
- தேசிய நலன்பேணும் முன்னணியின் தலைவர் சூளுரை!
- தேர்தல் வன்முறைகளின் உயிரிழந் தோர் எண்ணிக்கை பத்தாக உயர்வு. காயம டைந்தோர் எண்ணிக்கை 247.

**இன்னுமொரு பத்திரிகையில் இருந்து:**

- சிறுபான்மையினரின் உரிமைகள் உட்பட மனித உரிமைகள் பேணப் படும்!
- தேசிய நலன்பேணும் முன்னணி தலை வர்கள் கூட்டாக அறிக்கை.
- எதிர்க்கட்சியினர் நாட்டை படுகுழிக் குள் தள்ள முயற்சிக்கின்றனர் ஜனாதிபதி கண்டனம்.
- இன்று கொழும்பில் இறுதிப் பிரச் சாரக் கூட்டங்கள்.
- பிரதான அரசியல் கட்சிகள் பாரிய ஏற்பாடுகள்.
- தேர்தல் கண்காணிப்பாளர்கள் நாட்டின் பல பகுதிகளுக்கும் விரைவு.

- **மற்றுமொரு பத்திரிகையில் இருந்து:**
- தேசிய நலன் பேணும் முன்னணி தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை.
- முன்னணியின் தலைவர் பிரதமராகிறார்.
- புதிய அரசாங்கத்துடன் இணக்கப் பாட்டுடன் நடந்து கொள்ளப் போவதாக ஜனாதிபதி

- வெற்றியை கண்ணியமான முறையில் கொண்டாடுமாறு முன்னணியின் தலை வர்கள் வேண்டுகோள்.
- புதிய அமைச்சரவை விரைவில் அறிவிக் கப்படும்.

வெளியே மோட்டார் சைக்கிள் வந்து நிற்கும் ஓசை கேட்டது. எழுதுவதை இத்துடன் நிறுத்திக் கொண்டேன். பத்திரிகைகளை ஒழுங்காக அடுக்கி, முன்பு இருந்த இடத்தில் கவனமாக வைத்து விட்டு திரும்பியபோது, அன்சார் சேரின் மூத்த மகன் அந்த அறைக்குள் நுழைந்தார். அவர் முகத்தில் ஒரு சங்கட உணர்வு நெளிந்தது.

"சொறி சேர், ஒரு அவசர வேலயா வெளிய போக வேண்டி வந்திட்டு. நீங்க வந்து கனநேரமா சேர்?"

அவரது குரலில் நிஜமான வருத்தம் தெரிந்தது.

"இல்ல, இப்பதான்."

நான் அவரை மேலும் சங்கடப் படுத்தாமல், அவரை ஆறுதல் படுத்து வகையில் சுருக்கமாகக் கூறினேன்.

"பிர்தௌஸ், ரெண்டு பேருக்கும் குடிக்க கொண்டு வாங்க"

அவர் தனது தம்பியைக் கூப்பிட்டு சொல்லி விட்டு,

"இங்கேயே இருந்து கதைப்போமா சேர்?"

என்று என்னிடம் கேட்டார். நாங்கள் இருவரும் கதிரைகளில் அமர்ந்து கோண்டோம். எனினும் எங்களிடையே கதைப்பதற்கு அதிகமாக எதுவும் இருக்கவில்லை. நாற்பது வருட சேகரிப்பான அந்தப் பத்திரிகைகளை என்ன செய்வது என்று எனக்கும் தெரியவில்லை. என்னுடைய வீட்டிற்கு அவற்றை எடுத்துச் செல்லும் நிலையிலும் நான் இல்லை. அவற்றை வைப்பதற்கு எனது வீட்டில் இடம் இல்லை என்பதோடு, அவற்றை இனி என்ன செய்வது என்ற கேள்வியும் எனக்குள் எழுந்தது. அவற்றை படிப்பதற்கான தேவை யாருக்கும் இனி இல்லை – எனக்கும்தான். இறுதியில் அவற்றை, பழைய பேப்பர் வாங்குகின்ற கடையில் கொடுப்பது என்று நாங்கள் முடிவு செய்தோம். இந்த முடிவு அன்சார் சேரின் மூத்த மகனை சந்தோசப்படுத்துவதாக இருந்தது. தன்னுடைய முடிவாக இல்லாமல், தனது வாப்பாவுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த என்னுடன் சேர்ந்து எடுத்த முடிவு என்ற திருப்தி அவரது முகத்தில் தெரிந்தது. அன்சார் சேரின் நினைவாக நான் ஒரு பத்திரிகையை எடுத்துக் கொண்டேன்.

நாங்கள் வெளியே வந்தபோது அவர்,

"இந்த இடத்தில் கோழி வளர்க்கலாம் என்று இருக்கேன். குறைஞ்சது நூறு கோழி வளர்க்கலாம்"

என்று கூறினார். நானும் அவரது கருத்தை ஆமோதித்து தலையை ஆட்டினேன்.

"ஜசாக்கல்லாஹுல் ஹைறன் சேர். நீங்க வந்திருக்காட்டி இந்த பேப்பர என்ன செய்யிறதென்று எனக்கு முடிவெடுக்கேலாம இருந்திருக்கும்."


அவர் குரலில் நன்றியுணர்வு நிறைந் திருந்தது. நான் மெல்ல புன்ன கைத்து விட்டு அங்கிருந்து வெளியேறி னேன். அந்த ஒற்றைப் பத்திரிகை என் கையில் பெரும் பாரமாக கனப்பது போன்று உணர்ந்தேன். அன்சார் சேரின் அந்த நூலகத்திற்குள் இருந்து நான் எழுதிய பத்திரிகைகளின் தலைப்புச் செய்திகள் என் சட்டைப் பைக்குள் இருந்தன. அவை என் இதயத்தை அழுத்துவது போல் இருந்தது.

அறிவியல் பகுதி

# கட்டிட நிர்மாணத்தின் அதிசயம்

## பிரமிட்டுக்கள் Pyramids





**Niyas Aasha Falin**
B.Sc, SEUSL

பிரமிட் உலக அதிசயங்களில் கடந்த 4000 ஆண்டுகளாக தொடர்ந்து இருந்து வருகின்றது. இதற்கான காரணம் என்ன? நான் காயிரம் ஆண்டுகள் அதிசயமாக திகழ அப்படி என்னதான் அதில் உள்ளது என்று பல சந்தேகம் உண்டாகலாம். உண்மையில் அதற்கான பல தகுதிகளை தன்னகத்தே கொண்டு அமைந்துள்ளது பிரமிட்டுக்கள்.

அவ்வகையில் நாம் உலகத்தில் பார்க்க வேண்டிய அதிசயங்களில் மிக மிக்கியமான ஒன்று பிரமிட்டு. உலகில் இருக்கும் ஒவ்வொரு அதிசயமும் விளங்க முடியாத ரகசியத்தைக் கொண்டுள்ளது. பிரமிடுகள் தனக்குள் கொண்டிருக்கும் ரகசியத்திற்கு இவ்வறிவியல் யுகத்தில் கூட விடைகாணமுடியாத நிலையில் விஞ்ஞானம் உள்ளது....

தற்கால எகிப்துத் தலைநகர் கெய்ரோவின் புறப் பகுதியில் அமைந்துள்ள கிசா பிரமிடுகள் உலகப் புகழ் பெற்றவை. இதன் உயரம் கிட்டத்தட்ட 500 அடி. பிரமிடுகளில் மிகப் பெரிய பிரமிடான கிசா பிரமிடு 23 இலட்சம் கற்களால் கட்டப்பட்டது. ஒவ்வொரு கல்லும் சுமார் 2000 முதல் 9000 கிலோகிராம் வரை எடை கொண்டது. இந்தக் கற்களை எங்கிருந்து எப்படி இழுத்து வந்தார்கள் ஒன்றின் மீது ஒன்றாக எப்படி ஏற்றினார்கள் என்பது இன்னும் மர்ம முடிச்சாகவே உள்ளது. காரணம் சுற்றுவரை பெரும் பாலைவனமாக உள்ள பகுதியில் இப்பிரமிட்டுக்கள் அமையப்பெற்றுள்ளது. கிசா பிரமிட்டின் முட்பக்கம் உள்ள மனித சிலை தனிக்கல்லில் செதுக்கப்பட்ட உலகில் முதல் மிகப்பெரும் சிற்பம் என்று அழைக்கப்படுகிறது. இது பாரோ மன்னனின் சிலையாகும்.

இவ்வளவு எடை கொண்ட கற்களை அய்நூறு அடி உயரத்திற்குக் கொண்டு சென்றது மட்டுமன்றி ஒவ்வொரு கட்களிற்கும் இடையில் உள்ள இடைவெளி சுமார் 1mm அளவில் எவ்வாறு நுட்பமான சேர்த்து வைத்தார்கள் என்பதும் விந்தைதான். வெளிப்புற வெப்பநிலை 50 பாகை செல்சியசில் இருந்தபோதும் உள்ளக வெப்பநிலை 20 பாகை செல்சியசில் பகல், இரவில் பேணப்படுவதும் அதிசயம்தான். சுண்ணாம்புக் கற்களின் மேலடுக்குகள் நன்றாக பாலிஷ் செய்யப்பட்ட பளிங்கு சுண்ணாம்புக் கற்களால் வெளிப்புறம் பதிக்கப்பட்டுள்ளன. இதனால் இவை பகல் வேளையில் தங்க நிறத்திலும் இரவு வேளையில் சிவப்பு நிறத்திலும் காட்சி தரும்.

அத்தோடு புற கற்களில் வித்தியாசமான எழுத்துகள் பதிக்கப் பட்டுள்ளன. இவ்வெழுத்துக்களை மட்டும் பதித்தால் பத்தாயிரம் பக்கங்கள் கொண்ட நூல் ஆக்கமுடியுமாம். கிசாவில் உள்ள மூன்று பிரமிடுகளும் பைதகரஸ் தொடர்புடமை (Pythagoras theorem ) என்கிற கணித விதிகளின்படியும், பிரபஞ்சத்தில் உள்ள மூன்று ஒரின நட்சத்திரங்களைக் குறிக்கின்ற துல்லியக் கோட்பாட்டின்படியும் அமைக்கப்பட்டுள்ளதை ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். பிரமிட் அமைப்பு பூமியின் உண்மை வடக்கை (Truth North) திசையை மிகச்சரியாக வகைக்குறிக்கும் அமைப்பில் உள்ளது.

முற்றிலுமாக கண்டறியப்படாத உள் அறைகளின் பயன்பாடுகள், குறுக்கும் நெடுக்குமாகச் செல்கின்ற சதுரத் துளைகளின் பயன்பாடுகள் திருட வருபவர்களைக் குழப்புவதற்காக அமைக்கப்பட்ட தந்திரப் பாதைகள். 2004 இல் ரோபோக்களை உள்ளே செலுத்தி பார்வையிட்ட போது பல உள்பக்கம் அடைக்கப்பட்ட கதவுகள் கண்டறியப்பட்டது.

வியக்கத்தக்க முறையில் கட்டப்பட்டுள்ள பிரமிடின் கூம்பகங்களை பண்டைக் கால ஃபாரோ மன்னர்களின் வெறும் புதைப்புப் பீடமாக மட்டும் நாம் எடுத்துக் கொள்ளக் கூடாது! பிரமிடுகள் பூர்வீக எகிப்தியரின் வரலாற்றுக் களஞ்சியத்தின் சுரங்கமாக வடிக்கப்பட்டதுடன், அக்காலத்திய கணித, விஞ்ஞான, வானியல், மருத்துவ அறிவுத் திறமைகளையும், முறைகளையும் பறைசாற்றும் அறிவுக் களஞ்சியமாகவும் திகழ்கின்றன.

எகிப்தில் கட்டப்பட்டுள்ள வியக்கத்தக்க கோபுரங்களும், பிரமிட் கூம்பகங் களும் ஒரு புதிரான வரைகணித [Hermetic Geometry] முறையில் திட்டமிட்டுக் கட்டப்பட்டதாகத் தெரிகின்றன! அந்தக் கணித முறை நுணக் கங்களைப் புரிந்து பண்டைக் காலத்தில் பயன்படுத்திய எகிப்தியர் மிகச் சிலரே.

**இந்தப் பிரமிடுகளில் ஏராளமான மம்மிகள் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளன. மம்மிப்படுத்துதல் பற்றி...**

- இறந்தவரின் உடலைத் தனியாக ஒரு கூடாரத்திற்கு எடுத்துச்சென்று, மரணக் கட்டிலில் அவரைக் கிடத்தி பேரீச்சை மதுவாலும் நைல் நதி நீராலும் கழுவுவார்கள்.
- உடலின் இடது பக்கத்தில் அறுத்து உள்ளே இருக்கும் பகுதிகளை வெளியே எடுப்பார்கள்.
- நுரையீரல், கல்லீரல், வயிற்றுப் பகுதிகள், குடல் பகுதிகள் எடுக்கப்பட்டு கல் உப்பில் பதப்படுத்தப்படும்.
- இருதயம் அறிவின் இருப்பிடமாக எகிப்தியர்களால் கருதப்பட்டதால் அது உடலுக்குள்ளேயே இருக்கும்.
- ஒரு வளைந்த கம்பியை மூக்கின் வழியாக விட்டு உடைத்து, மூளையை எடுத்துவிடுவார்கள்.
- நதி நீரால் கழுவி, அதன்மீது வாசனை எண்ணெய்களைத் தடவுவார்கள். உடலை, பிசின் தடவிய துணியால் இறுக்கமாகச் சுற்றுவார்கள்.
- உடற்பகுதிகள் தனித்தனியாக ஜாடிகளில் (Canopic jars) வைக்கப்படும்.
- இறுதியில் பிரமிடுகளின் மய்யப்பகுதியில் அரச மரியாதையுடன் எடுத்துச் சென்று அடக்கம் செய்யப்படும், அரசர் பயன்படுத்திய அனைத்துப் பொருள் களும் பிரமிடில் வைக்கப்படும். இதில் தங்க வைர நகைகள் மற்றும் இதர விலையுயர்ந்த பொருட்களும் அடங்கும்.

குறிப்பாக அடிமைகள் கொண்டு இப்பணி மேற்கொள்ளப்பட்டதாக பரவலாக கூறப்படுகின்றது. ஆனால் உண்மை அதுவல்ல. பிரமிட்டு கட்டுவதை



புனிதமாக கருதி மக்களின் ஒரு பகுதியினர் ஈடுபட்டார்கள் என்று அண்மைய ஆய்வு கூறுகின்றது.

இவ்வாறான பல மனித சிந்தனைக்கு அப்பால்பட்ட பிரமிட்டை அமைக்க மனித வலு சக்தி பயன்படுத்தபடமால் வேற்றுக்கிரகவாசிகள் சக்தி பயன்படுத்தப் பட்டதாக சில விஞ்ஞானிகள் நம்புகின்றார்கள்.

**"ஜின்கள் ஸுலைமான் விரும்பிய மிஹ்ராபுகளையும், சிற்பங்களையும், தடாகங்கள் போன்ற பெருங் கொப்பரை களையும், நகர்த்த முடியா பெரும் பாத்திரங்களையும் செய்து கொண்டிருந்தன" (அல்-குர்ஆன் 34:13)**

# பெண்களை மிரட்டும்
## மார்பகப் புற்றுநோய்



Sameem Kansul Fazeen
MSc(R), BTech(Hons)
Iqbal Road.


பெண்களின் மார்பகம் என்பது ஆண்களுக்கு என்றுமே சுவாரஸ்யமானதாகவும், இச்சைக்குரியதாகவும் இருந்து வருகிறது.

தாய்ப்பாலில் தொடங்கி - முடி நரைத்த பின்னும்கூட, பெண்களின் மார்பகம் சார்ந்த ஆர்வமும், அதன் மேலுள்ள இச்சையும், அநேகமான ஆண்களுக்கு என்றும் குறைவதே இல்லை. ஆனால், பெண்களின் மார்பகம் பெரும்பாலும் பெண்களுக்கு ஒரு சுமையாகவே இருந்து வருகிறது.

மார்பகப் புற்றுநோய் (Breast cancer) என்பது மார்பகத் திசுக்களில் ஆரம்பிக்கும் புற்றுநோய்களைக் குறிக்கும், இது பெரும்பாலும் பால் சுரப்பி நாளங்களின் அல்லது அந்த குழாய்களுக்கு பாலைக் கொண்டு சேர்க்கும் நுண்ணறைகளின் உள் அடுக்குகளில் தோன்றும். நாளங்களில் உருவாகும் புற்று நோய்களுக்கு நாள புற்றுநோய் (டக்டல் கார்சினோமாஸ்) என்று பெயர். பெண்களுக்கு ஏற்படும் புற்றுநோய்களில் 2வது இடத்தில் இருப்பது மார்பகப் புற்றுநோய்.

வேலைக்குச் செல்லும் பெண்கள் ஆகட்டும், வீட்டில் இருக்கும் குடும்பத் தலைவிகள் ஆகட்டும், பெரும்பாலும் தங்கள் உடல் ஆரோக்கியம் பற்றி அதிகம் கவனம் செலுத்து வதில்லை. பெரும்பாலும் நோய் முற்றிய நிலையில் தான் அவர்கள் சிகிச்சைக்காகவே செல்கின்றனர். அதிலும் குறிப்பாக பெண்களை பெரிதும் தாக்கும் நோய்களில் ஒன்று மார்பக புற்றுநோய்.

பெண்களுக்கு ஏற்படும் புற்றுநோய்களில் இரண்டாவது இடத்தில் இருப்பது மார்பக புற்றுநோய்தான். மார்பக புற்று நோய் பற்றிய போதிய விழிப்புணர்வு இல்லாததே இதற்கு முக்கியக் காரணமாகக் கருதப்படுகிறது. அதன் ஆரம்பகால அறிகுறிகள் பற்றி சரியாகத் தெரிந்து கொண்டால், ஆரம்பத்திலேயே அதற்குரிய சிகிச்சைகளைப் பெற்று, எளிதில் குணமடைய முடியும். அதனால் தான் ஆண்டுதோறும் அக்டோபர் மாதம் மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு மாதமாக அனுசரிக்கப்படுகிறது. புற்றுநோயுடன் போராடுபவர்களை நினைவு கூறும் வகையில் பிங்க் நிற ரிப்பன் அணியப்படுகிறது.




**அறிகுறிகள்:**

1. முக்கியமானது மார்பில் தோன்றும் வீக்கங்களும் கட்டிகளுமாகும். வலி இருக்கிறதோ இல்லையோ எத்தகைய மாற்றங்களும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டியவையே.

2. மார்புக் கச்சையின் அளவும் ஆரோக்கியமும் சாதாரண அவதானத்தில் அல்லது கண்ணாடி முன் நின்று பார்க்கும்போது மார்பக அளவுகளில் மாற்றம் தென்பட்டால் அசட்டை செய்ய வேண்டாம். சிலருக்கு இயல்பிலேயே ஒரு மார்பு மற்றதைவிடப் பெரிதாக இருக்கும். இது பயப்பட வேண்டியதில்லை. ஆனால் அந்த அளவுகளில் புதிய மாற்றம் ஏற்பட்டால் கவனத்தில் எடுப்பது அவசியம்.

3. மார்பின் மேற்பரப்பில் ஏதாவது பள்ளம் அல்லது உட்குழிவு ஏற்பட்டால்.

மார்பக தோலின் மிருதுத் தன்மையில் மாற்றம் ஏற்பட்டால், முக்கியமாக தோடம்பழத்தில் உள்ளது போல சிறு திட்டிகளும் பள்ளங்களுமாக மாற்றம் ஏற்பட்டால்.

முலைக்காம்பின் தோற்றத்தில் மாற்றம். அல்லது துருத்திக் கொண்டிருந்த முலைக்காம்பு உள்வாங்கப்பட்டால்.

4. முலைக் காம்பின் ஊடாகத் திரவம் வெளியேறினால்.

5. மார்பகத்தில் வலி ஏற்பட்டால். சில பெண்களுக்கு மாதவிடாய் நேரத்தில் வழமையாக வலி ஏற்படுவதுண்டு. இதைத் தவிர ஏதாவது வலி ஏற்பட்டால் மருத்துவரைக் காண வேண்டும்.

பெண்கள் சிறுவயதிலேயே பூப்படைவது, 30 வயதுக்குப் பிறகு நடக்கும் திருமணங்கள், அதன் தொடர்ச்சியாக நடக்கும் குழந்தைப்பேறின்மைக்கான தொடர் ஹார்மோன் சிகிச்சைகள், டெஸ்ட் டியூப் பேபி போன்ற செயற்கைக் கருத்தரிப்பு முறைகள் மற்றும் தாமதமாகும் மெனோபாஸ் போன்றவைதான் மார்பகப் புற்றுநோய் வர முக்கியக் காரணங்களாகக் கண்டறியப் பட்டுள்ளன. மேலும் உறவினர்களில், குறிப்பாக தாய் அல்லது சகோதரிக்கு மார்பகப் புற்றுநோய் இருந்தால் அந்தக் குடும்பத்துப் பெண்ணுக்கு இந்தப் புற்றுநோய் வர 10 சதவிகித வாய்ப்புகள் அதிகம் என்பது தெரியவந்துள்ளது. குரோமோசோம்களில் BRCA 1&2 என்ற மரபணுக்கள் தோன்றுவதும்கூட மார்பகப் புற்றுநோயை உருவாக்கலாம்.

உடல்பருமன், உடற்பயிற்சியின்மை, புகை மற்றும் மதுப் பழக்கம், ரத்த அழுத்தம், சர்க்கரைநோய், ஒவ்வாத மேற்கத்திய உணவுப் பழக்கவழக்கங்கள், அதிகக் கொழுப்பு உணவுகள் போன்ற வாழ்க்கைமுறை மாற்றங்களையும் காரணங்களாகக் கோடிட்டுக் காட்டுகிறது உலகப் புற்றுநோய் மையம். இவ்வளவு கொடுமையான நோயை வரும்முன் கண்டறிவது எப்படி என்று தெரிய வேண்டியது அவசியம். நமக்கு நாமே பரிசோதித்துக் கொள்ளும் மார்பக சுயபரிசோதனை முறையும், மருத்துவமனை சென்று பரிசோதனை செய்யும் ஹமேம்மோகிராம் '(Mammogram)" முறை மூலமும் மிகவும் எளிதாகப் புற்றுநோயைக் கண்டறியலாம் என்கின்றனர் பெண்கள் நல மருத்துவர்கள்.



# ஆபத்து நிலையில் காட்சியளிக்கும்
# அரபா நகர் பாலம்



•MUTUR JM•



கட்டைபறிச்சான் தெற்கு கிராம சேவகர் பிரிவில் உள்ளடங்கும் தமிழ் முஸ்லிம்கள் சூழ்ந்த விவசாயத்தை பிரதான ஜீவனோபாயமாக கொண்ட சமூகமே அரபா நகர் கிராமமாகும். 2007/08 காலப்பகுதியில் மீள் குடியேற்றம் அடைந்த அரபாநகர் கிராமம் இடிமன் ஆற்றினால் சூழ்ந்து காணப்படுகின்றது. குறிப்பாக விவசாயம், சேனைப் பயிர்ச் செய்கை, விலங்கு வேளாண்மை, சிறு கைத்தொழில் அடிப்படையில் அங்கு வாழும் மக்கள் தங்களின் வாழ்வாதார மூலங்களை நிவர்த்தி செய்து வருகின்றார்கள்.

4 சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்ட கட்டைபறிச்சான் தெற்கு கிராம சேவகர் பிரிவில் அரபாநகர், அம்மன் நகர், சந்தன வெட்டை, கணேஷ புறம், கட்டைபறிச்சான் போன்ற கிராமங்களில் மொத்தமாக 745 குடம்பங்களை சார்ந்து 2341 சனத்தொகை 2020 ஆம் ஆண்டு மூதூர் பிரதேச செயலக அறிக்கை சுட்டிக்காட்டுகினது.

மீள் குடியேற்றத்தை தொடர்ந்து பொதுமக்களின் பங்களிப்புடன் தற்காலிக பாலம் அமைக்கப்பட்டு அது நிரந்தர பாலமாக மாற்றியமைக்க பிரதேச வாசிகளின் கோரிக்கையை ஏற்ற அப்போது களத்தில் இருந்த முஸ்லிம் எயிட் நிறுவனம் 6.5 மில்லியன் ரூபாய்களை நிதி உதவி அளித்தது.

இந்நிதி குறித்த பாலத்தை அமைக்க போதாமை காரணமாக அமேரிக்கன் கெயார் நிறுவனம் மேலதிக 8 மில்லியன் ரூபாய்களை அளித்து மொத்தமாக 14.5 மில்லியன் ரூபாய் செலவில் இடிமன் ஆற்றுக்கு குறுக்காக பாலம் 2012 ஆம் ஆண்டு பாலம் அமைக்கப்பட்டது.

பொதுமக்களின் அடிப்படை தேவையாக இருந்தமையினால் குறைந்த நிதி மூலத்தை பயன்படுத்தியே குறித்த பாலத்தை அவசமாக அமைத்தனர். இதற்கு பெரிதும் உதவியாக அரபா நகர் அகதிகள் புனர்வாழ்வு அமைப்பு தனது முழு பங்களிப்பை அளித்தமை குறிப்பிடத்தக்கது.

ஆனாலும் பாலம் வெறும் 10 வருடங்கள் தாண்டுவதற்கு முன்னரே பயன்பாட்டிற்கு ஆபத்தான நிலையில் தற்போது காட்சி அளிக்கின்றது. இதற்கு பிரதான காரணமாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம்...

- மாறி காலங்களில் நீர்த்தாவரங்கள் பாலத்தின் கீழ்ப் பகுதியை அடைப்பதனால் நீரோட்டம் தடைப் பட்டு பாலத்தின் அடித்தளத்தின் மண்ணை கரைக்கச் செய்தமை.
- பாலத்தில் மட்டுப்படுத்தப்பட்ட எடைக்கு மேலதிகமான எடை கொண்ட வாகனங்கள் பயணம் செய்தமை.
- குடிப்பாக சந்தனவெட்டை மலை உடைத்த கருங்கல் ஏற்றும் டிப்பர் வாகனங்கள் குடிப்பட்ட காலப்பகுதியில் அதிகமாக சென்றமை விசேட காரணமாகும்.
- இவற்றுக்கு மேலதிகமாக திட்டமிடலில் உள்ள பலகீனம் மற்றும் காலநிலை சீர்கேடுகள் என்பன மற்றும் மண்ணின் தன்மை என்பவற்றை குறிப்பிட்டு கூறலாம்.

தற்போது மீள் பாலம் அமைப்பதற்கான கோரிக்கை விடுக்கப் பட்டுள்ள நிலையில் கிழக்கு நீர்பாசன திணைக்களம் தங்களின் துறைசார் நிபுணர்களை கொண்டு பலமுறை சோதனைகளை நடத்திய நிலையில் இதுவரை முடிவு எட்டாத நிலையில் இருப்பதை குறித்து பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேற்படி விடயம் தொடர்பில் பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் கவனம் செலுத்துவதோடு அரபா நகர் பாலம் மீள் திருத்தம் அல்லது புதிய ஒன்றை அமைப்பது தொடர்பில் மாவட்ட அரசியல்வாதி களின் உதவியோடு தீர்வை எட்ட வேண்டுமென்று மூதூர் மக்கள் சார்பில் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

தேடல் தொடரும்....

**வாசகர்கள் மூதூர் தொடர்பான செய்திகளை எமது முகப்புத்தக (Facebook) பக்கத்தினூடாகவும் பார்வையிடவும் முடியும்.**

## மூதூரில் டெங்கு பரிசோதனை




மூதூர் சுகாதார வைத்தியதிகாரி எம்.பி.எம். ஹில்மி அவர்களின் தலைமையில் கடந்த (15) திடீரென ஒழுங்கு செய்யப்பட்ட டெங்கு கட்டுப்பாடு கள பரிசோதனையின் போது 10 கிராம சேவகர் பிரிவுகளை சார்ந்து 597 வீடுகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டத்தில் 32 இடங்களில் டெங்கு நுளம்பு குடம்பிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்நிலையில் சுற்றுப்புறத்தை தூய்மையாக பேணாமல் நுளம்பு பெருக வழிவகுத்தவர்களுக்கு எதிராக சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதுடன் 04 நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கௌரவிப்பு நிகழ்வு - 2021




மூதூர் பிரதேசசபை அலுவலகத்தில் நீண்ட காலமாக கடமையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் உத்தியோகத்தர்களையும், நிரந்த நியமனம் பெற்று செல்லும் பட்டதாரி பயிலுனர்களையும் பாராட்டி கௌரவித்து பணப்பரிசு வழங்கும் நிகழ்வு மூதூர் பிரதேச சபை செயலாளர் வீ. சத்தியசோதி அவர்களின் தலைமையில் அலுவலகக் கேட்போர் கூடத்தில் இன்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் கௌரவ விருந்தினராக தவிசாளர் எம்.எம்.அருஸ் அவர்களும் ஏனைய அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் போன்றோர் கலந்து கொண்டனர்.

## சுயதொழில் முயற்சிக்கான ஊக்குவிப்பு




சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் இன்று மூதூர் பிரதேச செயலகம் முன்பாக சிறுகைத்தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளை சந்தைப்படுத்தும் நோக்குடன் வியாபார சந்தையும், கண் காட்சியும் பிரதேச செயலாளர் மூலமாக ஒழுங்கமைப்பு செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் நஞ்சற்ற உற்பத்திகள், குடிசை கைத்தொழில் உற்பத்தி பொருட்கள் மற்றும் தாவர கன்றுகள் என்பன காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பிரதேச வியாபார சந்தை, கண்காட்சி




சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் இன்று மூதூர் பிரதேச செயலகம் முன்பாக சிறுகைத்தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளை சந்தைப்படுத்தும் நோக்குடன் வியாபார சந்தையும், கண்காட்சியும் பிரதேச செயலாளர் மூலமாக ஒழுங்கமைப்பு செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் நஞ்சற்ற உற்பத்திகள், குடிசை கைத்தொழில் உற்பத்தி பொருட்கள் மற்றும் தாவர கன்றுகள் என்பன காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அந்நஹார் மகளிர் ம.வி 1AB ஆக தரமுயர்வு




மாகாண கல்வி அமைச்சின் 2021.10.13 ஆம் திகதிய கடிதத்திற் கமைவாக 2021.09.01 முதல் 1AB பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டுள்ளது.

இதற்கமைய இவ்வருடம் முதல் விஞ்ஞானப் பிரிவுக்கான அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. பெண்கள் பாடசாலை ஒன்றில் விஞ்ஞானப் பிரிவு ஒன்றை மூதூரில் ஆரம்பிக்க இப்பாடசாலை ஒரு முன்னோடியாக அமைய வேண்டும் என்ற கல்விச் சமூகம், பெற்றோர் மற்றும் நலன் விரும்பிகளின் நீண்டகால அவாநிறைவு பெற்றுள்ளமை விசேட அம்சமாகும்.

## தி/மூ/ஆயிசா வித்தியாலயம் மூன்றாம் முறையாக க.பொ.த(சா/த) பரீட்சையில் 100% அடைவு




தி/மூ/ஆயிஷா வித்தியாலய அதிபருமான ஜனாப்.ே.ஆ.ஹிஸாம் முஹமட் (அதிபர்) அவர்களின் வழிகாட்டலில் மூன்றாவது முறையாகவும் தொடர்த்தேர்ச்சியாக க.பொ.த (சா/த) பரீட் சையில் 100% சித்தியினை அடைந்து தி/மூ/ஆயிஷா வித்தியாலயம் மூதூர் கல்வி வலயத்தில் இரண்டாம் நிலையினைப் பெற்று சாதனை படைத்துள்ளது.

இப்பாடசாலை இம்முறை 2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 07 சான்றிதழ்களை சுவீகரித்துள்ளதற்கான வலையக்கல்வி பணிப்பாளர் முனவ்வரா நளீம் அவர்களினால் கௌரவிக்கப்பட்டது.

இவ்வருடம் வெளியான 2020 GCE O/L பெறுபேற்றில் மூதூர் வலயத்திலுள்ள 35 க.பொ.த (சா/த) பாடசாலைகளில் ஆயிஷா வித்தியாலயம் 02ம் இடத்தை பெற்றுக் கொண்டதோடு 01ம்,03ம் இடங்களை முறையே கட்டை பறிச்சான் விபுலாநந்தா வித்தயாலயம், சதாம் வித்தியாலயம் என்பன பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## மூதூரில் சதோச திறந்துவைப்பு

சதோஷ விற்பனை நிலையம் மூதூர் பிரதான வீதியில் எதிர்வரும் 2021.11.18 வியாழக் கிழமை வர்த்தக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு மூதூர் பிரதான வீதியில் **(பிரதேச செயலகம் முன்பாக)** புதிய லங்கா சதோஸ கிளை ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.




"தேசத்தின் விலை நிர்ணயிகள்" என்ற தொனிப்பொருளின் கீழ் அத்தியாவசிய பொருட்களை நிர்ணய மற்றும் குறைந்த விலையில் பொதுமக்கள் நுகரும் விதத்தில் இவ்வர்த்தக நிலையம் திறக்கப்படவுள்ளமை விசேட அம்சமாகும்.

## நூற்றாண்டை முன்னிட்டு இரத்ததான நிகழ்வு



மூதூர் மத்திய கல்லூரி தேசிய பாடசாலையின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அதன் நூற்றாண்டுக் குழுவின் ஏற்பாட்டில், மூதூர் தள வைத்தியசாலையின் அணுசரனையில் கடந்த (07) இரத்ததான நிகழ்வு கல்லூரியின் அதிபர் எஸ்.ஏ.முஹீர் தலைமையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மூதூர் பிரதேச சபை தவிசாளர், மூதூர் வயக்கல்விப் பணிப்பாளர், மூதூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, கட்டைப்பறிச்சான் இராணுவ தளபதி மற்றும் முன்னாள் மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி உள்ளிட்ட பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## Digital Technology Unit
### வைபவரீதியாக திறந்து வைப்பு



தி/மூதூர் அல்ஹிதாயா மகா வித்தியாலயத்தில் Tab பயன்படுத்தி மாணவர்களுக்கு கற்றல் நடவடிக் கைகளை மேற்கொள்ளும் நிகழ்வு இன்று வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதிபர் எஸ். மஜூன் மற்றும் பிரதி அதிபர் ஜே. நிஹாஸ் ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது.

இதுபோன்ற பல முக்கிய பாடசாலைகளிலும் மாணவர் நலன்கருதி மூதூர் வலயக் கல்வி அலுவலகத்தின் அனுசரணையில் Tab வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.

## தோப்பூர் பிரதேசத்திற்கானபொலிஸ் நிலைய ஸ்தாபிப்புக்கான முன்னெடுப்பு



தோப்பூர் பிரதேசத்தில் நிரந்தர பொலிஸ் நிலையம் ஒன்று அண்மையில் திறக்கப்பட உள்ளமையினால் குறித்த பொலிஸ் நிலைய வளாகத்தினை சூழவுள்ள பகுதியை கடந்த (18) பொதுமக்களின் பங்களிப்புடன் மாபெரும் சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டது.

## பொதுநூலகத்திற்கு புத்தகங்கள் கையளிப்பு



இலங்கைக்கான இந்திய தூதுவரினால் வழங்கப்பட்ட ஒரு தொகை புத்தகங்கள் ஹலோ எப்எம் நிறுவன பணிப்பாளர் மொஹமட் ஷரீக் அவர்களினால் கடந்த (18) மூதூர் பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.அரூஸ் அவர்களுக்கு மூதூர் பொது நூலகத்திற்கான ஒருதொகை புத்தகங்கள் கையளிப்பு செய்யப்பட்டது.

## தாய் சேய் பராமரிப்பு நிலையம்




கேணிக்காடு கிராம அபிவிருத்தி சங்கத்தின் வேலைத்திட்டமாக 3 மில்லியன் ரூபா செலவில் அமையப் பெறவுள்ள தாய் சேய் பராமரிப்பு நிலையத்திற்கான நிதி உதவியினை டுபாய் நாட்டைச்சேர்ந்த அஷ்ஷெய்ஹ் அக்கீல் அவர்கள் வழங்கி வைக்கவுள்ளார்.

குறித்த கட்டிடத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த 10-11-2021 அன்று இடம்பெற்றிருந்தது.

## 9A சித்திபெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு



YMMA Mutur Branch ஊடாக மூதூர் வலயத்தில் கடந்த 2020 ஆம் ஆண்டு கா.பொ.த சாதாரண தர பரீட்சையில் 09 பாடங்களில் A சித்திபெற்ற மூதூர் வலயக் கல்விப் பிரிவிற்கு உட்பட்ட மாணவர்களைக் கௌரவிப்பும், பரிசளிப்பு விழாவும் மூதூர் பிரதேச சபையில் “கலீலா உம்மா பௌண்டேஸன்” அணுசரனையில் நடைபெற்றது.

## முறையற்ற காணி அபகரிப்புக்கெதிரான கவனயீர்ப்புப் போராட்டம்



மூதூர் ஜபல் நகர், இருதயபுரம் மற்றும் 64 அம்மா கட்டை பிரதேசத்தை சார்ந்த பொது மக்கள் பங்களிப்புடன் சர்வமத தலைவர்களின் தலைமையில் பிரதேச செயலகம் முன்பாக முறையற்ற காணி அபகரிப்புக்கு எதிராக கவனயீர்ப்பு போராட்டம் கடந்த 25.10.2021இல் நடை பெற்றது.

இந்நிகழ்வில் மாவட்ட செயலாளருக்கு மூதூர் பிரதேச செயலாளர் ஊடாக முறையற்ற காணி அபகரிப்புக்கு தொடர்பிலான மகஜர் ஒன்றும் கையளிப்பு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இப்பிரச்சினை மேலும் தொடரும் பட்சத்தில் தொடர்ச்சியாக கவனயீர்ப்பு போராட்டம் தொடர்ந்தும் நடைபெறும் என இக்கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட சர்வமத தலைவர்கள் கருத்து தெரிவித்தனர்.

## தோப்பூர் மண்ணின் முதல் பெண் சட்டத்தரணி



முகமட் அலி பாத்திமா மன்சிபா தோப் பூரைப் பூர்வீகமாகவும் மூதூரை வசிப்பி டமாகக் கொண்ட முகம்மது அலி பாத்திமா மன்ஸிபா கடந்த 15 ஆம் திகதி அன்று இலங்கை உயர் நீதிமன்றின் பிரதம நீதியரசர் முன்னிலையில் சட்டத்தரணி யாக சத்தியப்பிரமாணம் செய்து கொண் டார்.

தி/மூ/பாத்திமா மகளிர் கல்லூரியில் கல்வி கற்று, உயர் தரத்திலும் விசேட சித்தி பெற்று முதல் அமர்விலேயே சட்டபீட மாணவியாக கொழும்பு பல்கலைக் கழகத்தில் கற்று இன்று தோப்பூர் மண்ணின் முதல் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்துள்ளார். இவர் முகமட் அலி, சித்தி நயீமா என்பவருக்கு புதல்வியாவர்.



# உள்ளத்தை முகாமை செய்தல்

## ஸுன்னாவை முன்னிறுத்திய 5S வழிகாட்டுதல்கள்



**நிஸாத் நளீமி**
(B.A)(M.A) PGD in Diplomacy
Dip in HR, Dip in Law

மனிதனது கற்பனை, தீர்மானங்கள், உணர்ச்சி, போக்கு, நடத்தை என அனைத்திலும் செல்வாக்குச் செலுத்துவது உள்ளமாகும். உள்ளம் குறித்த பல ஆய்வு முயற்சிகள் விஞ்ஞான ரீதியில் நடைபெற்ற போதினும் முடிந்த முடிவாக அதனது செயற்பாடுகள் வரையறை செய்யப்படாது உடலுடனான தொடர்புகள் குறித்தே விளக்கப்பட்டுள்ளன.

வேறெந்த படைப்புக்களுக்குமில்லாத வகையில் “ஆன்மா” வழங்கப்பட்டு அதனது தொழிற்பாடுகளினூடே மனித வாழ்வின் வெற்றி, தோல்வியில் அதனது தாக்கம் குறித்தும் இஸ்லாம் தெளிவுபடுத்தியிருக்கின்றது.

தனிமனிதன் ஒருவரின் உண்மையான சுயத்தை, சாராம்சத்தினை அவரது செயற்பாடுகள் விபரித்துவிடுவதால் அதற்கான தூண்டுதலும் துலங்கலும் (Cause and Effect) குறித்து “உளவியல்” எனும் சமூகஅறிவியல் பரப்புக்குள்ளால் பலஆய்வு முயற்சிகள் நடைபெற்றுவருகின்ற சமகாலத்தில் உளவியல் பிரச்சினைகளும் வளர்ந்து செல்வதனை அவதானிக்க முடிகின்றது.

ஆக உள்ளம் குறித்து அதீத கவனம் செலுத்த வேண்டி இருப்பதனால் ஸுன்னாவினது வழிகாட்டுதலுடன் ஜப்பானிய உற்பத்தித்துறையில் பாரிய முன்னேற்றத்துக்கு வித்திட்டு மேற்குலகில் கூட பின்பற்றப்பட்டு வரும் 5S முகாமைத்துவ வழிமுறையினை உள்ளத்தைத் நிறுவகித்தலுடன் இங்கு பொருத்தி விளக்கப்படுகின்றது.

**5S முறைமை**

- நிரற்படுத்தல் - Sort - seiri
- ஒழுங்குபடுத்தல்-Set in Order - seiton
- தூய்மைப்படுத்தல் - Shine - seisō
- தரப்படுத்தல் - Standardize -seiketsu
- தொடர்ந்திருத்தல் Sustain - shitsuke

### 01. நிரற்படுத்தல் - Sort - seiri

இருக்கும் அம்சங்களில் தேவையானதை மாத்திரம் அணுகுவதனை இது குறிக்கின்றது. அவசியமற்ற விடயங்களை அலசும்போதும், அவற்றில் ஈடுபடும் போதும் அவசியமானவற்றில் ஈடுபடுவதனை விட்டும் தூரமாக்கப்படுகின்றோம்.

பொதுவாக சமூகவலைத்தள பாவனையில் இதனை அவதானிக்க முடியும். சற்றே உள்நுழைந்து அதிகப்பேரின் நேரங்கள் அலைக்கழிந்து போவது மாத்திரமல்ல தனது மனம் விரும்பாத பல செய்திகளால் மன உளைச்சலுக்குள்ளும் ஆளாகிவிடுகின்றனர்.

ஆகவே உளநலத்துக்குப் பொருத்தமான ஸுன்னாவினது வழிகாட்டுதலில் முதலாவதாக உள்ளத்தினை நிரற்படுத்த தேவையற்றதை புறமொதுக்குவதாகும்.

**“இஸ்லாமியருக்கு சிறந்தது யாதெனில் தனக்கு தேவையற்றதை விட்டுவிடுவதாகும்.”(திர்மிதி)**

### 02. ஒழுங்குபடுத்தல் - Set in Order - seiton :

போட்டிகளுக்கும், பொறாமைகளுக்கும் மத்தியில் உள்ளமானது மன அழுத்தத்திற்குள்ளாதல் தவிர்க்க முடியாத ஒன்றாகி விடுகின்றது.

தனிநபர், சமூகம், நாடுகளுக்கிடையிலான குரோதங்கள் கூட இரு மனங்கள் ஒத்துப்போகாத நிலையிலேயே தோற்றம்பெறுகின்றன. இந்நிலை நீங்கி வளம்பெற வேண்டுமாக இருந்தால் தன்னை போலவே மனிதநேயம் கொண்டு அடுத்தவர்களையும் அணுகல் அவசியமாகும்.

**“தனக்கு விரும்புவதனையே தனது சகோதரனுக்கு விரும்பாத வரை ஒருவர் பூரண ஈமான் கொண்டவராகமாட்டார்” (புகாரி)**

அவர்களுக்குமானது என விரும்பிவிட்டாலே உள்ளம் ஒழுங்குபடுத்தப்பட்டுவிடும்.

### 03. தூய்மைப்படுத்தல் - Shine - seisō :

சீரான உள்ளத்திலே சீரான சிந்தனைகள் ஊற்றெடுக்கும். அச்சிந்தனைகளோடு தான் சிறந்த செயற்பாடுகள் பிறக்கும். புகழ் விரும்பிகளால் ஒருபோதும் சீரான உள்ளத்தினை கொண்டிருக்க முடியாது.

சமூக சேவைகளில் கூட மனித புகழ்ச்சிகளுக்காக, சமூக மட்டத்தில் பாராட்டுக்களை பெற்றுக்கொள்வதற்காக அலையும் பலரை காணக்கூடியதான போக்கானது போட்டித் தன்மையை அதிகரித்து மறுபக்கம் நிலையான அபிவிருத்திகளில் பாதிப்புகளை ஏற்படுத்தியிருக்கின்றது.

**“எண்ணங்களை போன்றே செயல்களும் அமைந்துவிடுகின்றன. ஒவ்வொருவரும் தான் எண்ணியதற்கே கூலிகளை பெறுவார்” (புகாரி)**

இறைவனுக்காக என உள்ளத்தினை தூய்மைப்படுத்தி தொழிற்படும் போது ஈருலக வெற்றியும் உறுதிப்படுத்தப்படுகிறது.

### 04. தரப்படுத்தல் - Standardize -seiketsu

தரப்படுத்தல் என்பது புறத்தோற்றத்தினை மெருகூட்டுதலாகும். உள்ளத்தினது நிலைப்பாடுகளை வெளிக்காட்டும் பிரதான ஊடகமே பேச்சாகும். வார்த்தைகளால் வாழ்க்கை இழப்போருமுண்டு. சிறந்த வார்த்தைகளைக் கொண்ட அணுகுமுறையானது நெருக்கத்தினையும் அதிகரித்துவிடும்.

**“அல்லாஹ்வையும், மறுமை நாளையும் ஈமான் கொண்டவர் பேசினால் நல்லதை பேசட்டும் அல்லது மௌனமாக இருக்கட்டும்” (புகாரி)**

மௌனம் சில இடங்களுக்குப் பொருத்தும் சில இடங்களில் அதுவே ஆபத்தாகிவிடும். சிலருக்கு மௌனம் தன்னை யாரென அடையாளப்படுத்திக் கொள்ள மறைப்பதற்கான முகமூடி. நல்ல மௌனம் வரவேற்புக்குரியதே.

### 05.தொடர்ந்திருத்தல் Sustain - shitsuke :


**“அமல்களில் அல்லாஹ்விற்கு விருப்பமானது எது எனக் கேட்க நபி(ஸல்) குறைவாயினும் தொடர்ந்து செய்வதாகும்.” எனக் கூறினார்கள் (புகாரி)**

மேற்கூறப்பட்ட 04 நிலைகளில் முஹாசபா எனும் மீள்பரிசோதனையுடன் உள்ளத்தினை தொடர்ந்து வைத்திருப்பதானது நிலையான ஓர் மாற்றத்திற்கு வழிவகுக்கும்.

மேல் விளக்கப்பட்ட அம்சங்கள் 5S வழிமுறையினை முன்னிறுத்தி உள்ளத்தினை முகாமை செய்தல் குறித்த ஸுன்னாவினது வழிகாட்டுதல்களை அவதானித்திருந்தோம். இக்கட்டுரையின் சுருக்கக் குறிப்பாக இக்ஹதீஸினைக் கொண்டு நிறைவுசெய்கின்றோம்.

**அறிந்துகொள்ளுங்கள்! உடலில் ஒரு சதை துண்டொன்றுள்ளது அது சீரடைந்து விட்டால் முழு உடலும் சீரடைந்துவிடும். அது சீர்கெட்டு விட்டால் முழு உடலும் சீர்கெட்டுவிடும். அறிந்து கொள்ளுங்கள்! அதுவே உள்ளமாகும்”(புகாரி)**

# “கல்வி மூலம் எதிர்பார்க்கப்படும் மானுடப் பண்புகளும் இலங்கையின் கல்வி முறைமையும்”



### - ஒரு தூரநோக்கான பார்வை

தொடர் - 05



**A. S. Mohammed Fousi**
B.A.Hons, M.A,PGDE
Teacher Educator (SLTES)
Lecturer - Uva NCOE Bandarawela.

கல்விக் கண்ணைத் திறந்து காலவோட்டத்தின் மாறுதலுக்கேற்ப மாணவர் சமூகத்தை மானிடப் பண்புகளில் சிறந்து விளங்கச் செய்கின்ற மாட்சிமையுடன் கூடிய ஓர் உன்னத சமூகமாகக் கட்டியெழுப்பும் நோக்குடன் இலங்கையின் கல்வி முறைமைகள் முன்னெடுக்கப்பட்டும் இத்தகைய நெருக்கீடுகளும் சறுக்குதல்களும் ஏற்படுவதற்கான காரணங்கள் என்ன? என்பதைக் கண்டறிவதில் அறிஞர்கள் பலரும் பல கோணங்களில் சிந்தனையை சிதறவிட்டுக் கொண்டிருப்பதை அண்மைக்காலத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

கல்வியின் மூலம் அடைய எதிர்பார்க்கின்ற உன்னதமான மானிடப் பண்பாடுகள், பழக்கவழக்கங்கள், சீர்மியப் பண்புகள் என்பன உணமையாகவே எய்தப்பட வேண்டும் என்பதில் அரசும் அரசுசார் அங்கத்தவர்களும் துரிதமாகவும் துணிகரமாகவும் செயற்பட்டு வருவதைக் காணமுடிகின்றது.

அந்தவகையில் நாட்டின் தேசிய நலத் திட்டங்களில் பொருளாதாரம் மற்றும் சுற்றுச் சூழல் செயற்திட்டங்களை கல்வி முறையுடன் இணைக்கும் போக்கு அண்மைக்காலமாகத் தொடர்ந்து கொண்டிருப்பதானது, கல்விப் புலம் சார்ந்த ***வளர்ச்சி*** நிலைக்கு கிடைத்த மகத்தான வெற்றி என்றுதான் சொல்ல வேண்டும். எந்தவொரு துறை சார்ந்த மாற்றங்களையும் முன்னெடுப்பதென்றாலும் அவை கல்விச் சூழலுக்குள் கட்டமைக்கப்பட்டுள்ள மாணவர் சமூகத்திடமிருந்துதான் முடுக்கிவிடப்படுவதானது இதற்குத் தக்க சான்றாகும்.

கற்றலின் மூலம் மாணவர்களின் நடத்தைக் கோலத்தில் ஏதேனுமொரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்றும் இதனை அடியொற்றியதாகவே பாடசாலையில் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

கல்விசார் மாற்றங்களை விரும்பும் கல்வியியலாளர்கள் அக்கலைத்திட்ட விவகாரங்கள், மாணவர்களின் தேவைகள், ஆசிரியர்களின் செயலூக்கங்கள், அவர்களது வாண்மை விருத் திக்கான இற்றைப்படுத்தல் (Update) என்பனவற்றிலும் அதிக கவனம் செலுத்துவார்கள். “தரமான கல்விக்கு தரமான ஆசிரியர்கள்” என்ற கருத்து இதன் காரணமாகவே கூறப் படுகின்றது.

ஆசிரியர்களை வாண்மைத் திறனுள்ளவர்களாக ஆக்கு வதன் மூலமே பாடசாலையின் செயற்பாடுகளை வினைத்திறன் மிக்கதாகவும் விளைதிறன் மிக்கதாகவும் மாற்றமுடியும். இத்த கைய தன்மை கொண்ட ஆசிரியர்கள் கற்பிக்கின்ற பாடசாலையில் இருந்து வெளியேறுகின்ற மாணவர்களே உச்ச அளவிலான அறிவாற்றல் பெற்றவர்களாகவும் எதிர்கால சவால்களுக்கு முகங் கொடுத்து வெற்றி பெறக்கூடிய தேர்ச்சிகளைப் பெற்றவர்களா கவும் வெளியேறமுடியும் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

இந்த உண்மை நிலைமைகளைக் கவனத்திற் கொண்டு தான் காலத்திற்குக் காலம் கலைத்திட்ட மாற்றங்களை அரசாங்கம் மேற்கொண்டு அவற்றினூடாக கல்வியால் எய்த எதிர்பார்க்கின்ற இலக் குகளை நோக்கிப் பயணிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

மாறிவரும் உலகிற்கு ஏற்ப கல்வி முறைமையிலும் கலைத்திட்ட வளர்ச்சியிலும் மாற்றங்கள் ஏற்படுத்தப் படுகின்றன. குறிப்பாகக் கற்றல் - கற்பித்தல் நுட்பங்களும் மாணவர்களின் வயதுமட்டம், இயலுமை, இயலாமை, அவர்களது தேவைகள், ஆற்றல்கள், அனுபவங்கள் என்பனவற்றிற்கேற்ப மாற்றமடைந்து வருகின்றன.

2007 ஆம் ஆண் டைய கல்வி மறுசீரமைப்பின் படி நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கலைத்திட்ட செயற்பாட்டில் மாணவர்களால் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய தேர்ச்சி மட்டங்கள் நிறைவு பெறும் விதமாக ஆசிரியர்கள் கற்பித்தல் செயற்பாடுகளை ஒழுங்கமைத்துக் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அந்தவகையில், 2007 இல் முன்மொழியப்பட்டு, 2008 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற கலைத்திட்டமானது தேர்ச்சிகளை மையமாகக் கொண்ட, செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட, மாணவர்களை மையமாகக் கொண்ட அணுகுமுறைகளில் விருத்தி செய்யப்பட்டுள்ளது.

**பார்வை நீளும்......**

## எதுவரைக்கும்?

வீதி விட்டு சற்று
விலகிக் கிடக்கிறது
இறந்த நாயின் உடல்
கடக்கும் அவசரத்தில்
லொறியோ பஸ்ஸோ
மோதுண்டு போயிருக்கும்
மனிதனே சில வேளை
மதி கெட்டு விடுகிறான்
நாய் எம்மாத்திரம்....?
பார்த்தும் பார்க்காமலும்
கடந்து விட்டனர்
நூற்றைத் தாண்டி-இன்று
பார்த்து விட்டுச் செல்வோர்
நாளை மூக்கைப் பிடித்துக்
கொள்வர் துர்நாற்றம் தாங்கா
வழிப் போக்கரை விடுவோம்
எதிரேயுள்ள ஹோட்டல்
உரிமையாளர்
அருகிலுள்ள அலுவலக பணியாளர்
சுற்றியுள்ள குடியிருப்பாளர்
தரிப்பிடத்தில் அரை நாளை
அரட்டையிலேயே கழிக்கும்
ஆட்டோ சாரதிகள்....
எவருள்ளும் தோன்றவில்லை
பாதுகாப்பாய் அகற்ற
உள்ளூராட்சி ஊழியர்கள்
வரும்வரை காத்திருக்கும்
சமூகமா நாம்?
பாதையில் கல் முள் கண்டால்
உடனகற்றி ஈமானை உறுதியாக்கிட
விரும்புகிறது இஸ்லாம், விடுத்து
அடுத்தவன் செய்யட்டும்
பொறுப்பாளன் பார்க்கட்டும் என்ற
மட்டமான சிந்தனையும்,
நமக்கேன் தேவையென்ற மரத்துப்
போன சுயநலமும் எமைவிட்டு என்று
அகலப் போகின்றது?
இன்னும் எத்தனையோ
உதாரணங்களை அடுக்கிடலாம்....
"ஒரு கடமையிலிருந்து விலகுபவர்
ஒரு இலாபத்திலிருந்து நீங்குகிறார்"
யாரோ மாமேதை கூறியது மனதைத்
தட்டட்டும்!!!!!

**ஜே.நிகாஸ் (ஆசிரியர்)**



## மாறிவிடு நங்கையே

இருள் சூழ்ந்த கும்மிருட்டில் மௌனம் பேசும் இரவிலும்
என் கண் முன் நிழலாடுகிறது நவீன
நங்கையர்களின் நடத்தைகள் தான்....

நவீனம் எனும் காவியமேற்று நகரம்
நகரமாய் சுற்றி வருகிறாய்
அரைகுறை ஆடையுடன்
நங்கை எனும் நாமம் மறந்து...

போதை பொருளாய் உன் கையில் கையடக்க
தொலைபேசி , முகப்புத்தகத்தில் முகமறியா
அஜ்னபியுடன் முகம் பார்த்து பேசும்
உனக்கு ஏன் மறந்து
போனதோ தெரியவில்லை
உறவுகளின் முகம் பார்த்து பேச....

நபிமார்களை சுமக்க வேண்டிய
உன் உள்ளம் தானே நடிகர்களை சுமந்து
கொண்டிருக்கிறது.
முன்மாதிரி முஹம்மது நபி இருக்க
ஏன் உனக்கு நரகின் சொந்தங்கள்.....

அருள் மறையாம் திருமறையை
மொழிய வேண்டிய திருவாய்கள் .....
மறந்து தான் விட்டது இறைவசனங்களை
இருந்ததும் இசையை இசைக்க மறக்கவில்லையே
உன் நாவு...

உனக்கொரு கஷ்டம் வந்தால் நொடிப்பொழுதும்
இறைவனை துதிக்கிறாய், இருந்தும் ஏனம்மா நீ
இறைக்கட்டளையை ஏற்க மறுக்கின்றாய்
ஐநேர தொழுகையை தான் மறந்து விட்டாய் உனக்கு
ஐயம் என்பது இல்லையா???
மறுமை நாளில் என்ன செய்யப் போகிறாய்

தினம் தினம் சினிமாவை பார்த்து மகிழ்கிறாய்
உனக்கு இன்னுமா? புரியவில்லை இது
நிரந்தரமில்லை என்பது...

நங்கையே !!!!
வேண்டாமா உனக்கு சுவன இன்பம்
மதிமயங்கும் நாளில் நீயும் சுவனம் நுழைய
நங்கையே நீயும் மாறிவிடு
பாத்திமா வழியில் வாழ
நீயும் மாறிவிடு

இசையை மறந்து, சினிமாவை மறந்து
தீமையை விட்டும் எழுத்து வா
தீனுக்காய் உழைப்போம்
சுவன இன்பம் காண்போம்.



**இல்மா கபூர் – அக்குரணை**

## தனிமை

முன்னர் என்னிடம் சில நாட்கள் இருந்தன.
மன ஆழத்தே பத்திரமாய் .
அவற்றின் வாசம் மங்கவில்லை.

தனித்த வாழ்வின் நொடிகள்
தரும் இந்நாள் அவ்வாசனை நுகர்வேன்.
ஒவ்வொன்றாய், ஒவ்வொன்றாய்...
இதழ் பிரித்து,

அது விளங்காது அவர்களுக்கு.
தனியே நான் பேசுகையில்,
பாடிக்கொண்டிருக்கையில்,
அதிமகிழ்வு நினைவெழும் கணம்
சிரிக்கையில்,
எனைவிட்டுச் சென்ற கணவன்
நினைவில் அழுகையில்,
எனை நோக்கி வருகிறார்
மனநல மருத்துவர்.
எத்தனை முதியோர் இங்கு.
இந்த இல்லமாவது நான் தூங்க
கிடைத்திருக்கிறது.
கடவுளுக்கு நன்றி.

சதாவும் நான் உறக்கத்திலிருக்க
பிரியப்படுகிறார்கள்.
என்னோடு நேரம் செலவழிக்க
முடியாத பிள்ளைகள்.
தூரம் மிகத்தூரமான கண்டத்தில்
வாழ்வை அமைத்துக்கொண்டார்கள்.
நல்வாழ்வு பெறுக
என் செல்வங்களே.

மகளே,முன்னர் சில நாட்கள் இருந்தன
நான் நலமுடன் இருந்தேன்
மகிழ்ச்சியாகவும்.
பூக்களின் மத்தியிலும்.
அப்போது என் துணை
என்னோடுதான் இருந்தது.



**அஷ்ரபா நூர்தீன்**
**2021.11.20**

## சிறகுகள் இருந்தும் சிறைக் கைதியாய்....

சிறகுகள் இருந்தும் சிறைக் கைதியாய்
அடைந்த பின்னே என்ன பெண்ணே!

தப்பிக்க வழிகள் உண்டு மானே!
உந்தன் விழிகளால் மீண்டும் அடைகிறேனே!
மைத் தீட்டிய மாய விழிக்காரியே!
விரித்தாயே வலையை வெட்கப் பார்வையிலே!

தடுமாறி நின்ற எனது இதயத்தை
சிரிப்பால் ஈர்த்து அடைத்துக் கொண்டாயே!
இதுபோல இனிமை எங்கும் இல்லையே!

காதலின் அருமை புரிந்து கொண்டேனே!
கரங்கள் கோர்க்கவே அனுமதி கேட்கிறேன்
நிராகரிக்காமல் ஏற்பாயென நம்பிக்கையின்
பிடியிலே!

**கூ.மு.ஷேக் அப்துல் காதர்**
**இந்தியா.**



## கொரோனா

சீனாவில் பிறந்து உலகெங்கும் பறந்து
மரண ஓலங்களை தந்த கொரோனா
நிறைய நன்மைகளையும் செய்து
விட்டிருக்கிறது...

பாடசாலை என்றும் பின்னேரே
வகுப்பென்றும் தொழில் என்றும் தூரப்
பயணமொன்று சிதறி கிடந்த
உறவுகளை ஒன்றாய் சேன்றுபாசத்தை
பகிற வைத்தது கொரோனா...

கடை சமையல் அலுத்துப்போக
காலை காலை இரவென்று கடையப்பம்
பராட்டா வெறுப்பேத்த செத்த நாவுக்கு
வீட்டு சமையலால் சுவையேற்றிய
கொரோனா...

**இர்பான் ஆயிஷா இப்fபத்**
**நெடுங்குளம் வீதி, புத்தளம்.**

## வறுமை

யாசிக்கின்றது பசி
துணை போகின்றது ஏழ்மை...
உண்டி காய்கிறது உடல் மெலிகின்றது
வறுமை மானிடனாக நிலைமாறியது...
உடையவர் வயிறு நிறைய
இல்லாதவர் இரையாகின்றார்...
முறியடிக்காத முடியாத சாதனை
தீர்க்க இயலாத பசி...
ருசி அறியாத வாழ்வு
கல்லை கட்டி பசி தீர்த்த பிறப்பு...
கால் வயிற்றை நிரப்ப
காதவழி தூரம் நடக்கும் உடல்...
அழுவோ கண்ணீர் இல்லை
நஞ்சு உண்ணவோ பணம் இல்லை...
போகும் இடமெல்லாம் கடிந்தனர்
காணும் கண் கடலிலே கழுவினர்...
ஆதரிப்போர் யாருமின்றி
அலைகடல் துரும்பாகினோம்...
வறுமைக்கு உயிரே காணிக்கை...
பசிக்கு மரணமே தீர்வு...



தௌபீக் எம். நவீத், புல்மோட்டை

## வலி சுமந்த இனம்

எங்கும் அவலம் எங்கும் ஓலம்
சிவப்பு கம்பலம் விரிந்த நிலந்தன்னில்
நீட்டி நிமிர்ந்தன உடல்கள்
அரைகுறை அங்கங்களுடன் அவஸ்திகள்
அப்பப்பா! எண்ணிலடங்காத வேதனைகள்
எத்தனைதான்......

பலவாண்டு நடந்த ஆக்கிரமிப்பின்
அடங்கலன்று
பல்லாயிர உயிர்கள் மடிந்ததன்று
தமிழன் தமிழனாய் வாழ நின்றதன்று
தன் நிலமை இழந்து நின்றதன்று

பிஞ்சுகள் பல மடிந்தன அன்று
பிளவுகள் பல தீர்ந்தன அன்று
மாதர் பலர் மதியிழந்தனர் அன்று
மங்கையர் பலர் கதிகலங்கினர் நின்று.



உமாதேவி,
மட்டக்களப்பு

## கண்ணீரில் புன்னகை!

நித்தமும் வாழ்வில் புன்னகைக்க
வரம் கேட்க.....கிடைக்கிறதே
நிதர்சனப் பெயரில்......
கண்ணீர் எனும் வரம்.....!!!

மலர்களின் பனித்துளியும்
செந்திர கதிரவனின்
சிரிப்பொளியால்.....நிதமும்
பூக்கின்றன.....!!!!

வான்கொண்டு இறங்கும்
நீர்த்துமிகளும் .....
மேக மின்னலின்
சுடர் கொண்டு......
துளிர் விடுகின்றன....!!!!

சாகரச் சிற்பிகளும் தன்னை
அலங்கரிக்கின்றன......
வெண்ணிற முத்துக்களாய்
சுடர் விட்டொளிற....

காற்றோடு வீசும் சாரலின் ....
அலைகொண்டே.....
மெய் சிலிர்கிறது
சிறு புன்னகையில்..!!!!!

நீரிலே தினம் மலரும் என்
தோட்டத்து வெண்ரோஜாக்களும்
புன்னகைக்கின்றன என்னைப்பார்த்து....
வெண்ணிற இதழ்களுடன்...!!!!!

விழி இமை நொடியெல்லாம்
விழுகின்ற ....கண்ணீர்
துளிகளுக்குள்....புதைந்து
கிடக்கின்றன....புன்னகை எனும்
போர்வை....!!!!

வாழ்வில் கண்ணீரை கண்டு
துவளாதே.......
புன்னகை எனும் பொக்கிஷம்
பூத்துக்கிடக்கின்றன....
கண்ணீரில்
புதைந்தவனாய்...!!!



ஏ.எஸ். தஸ்லிமா நஸ்ரின்
வெலிமடை.

## பெண்மை

பெண்மையென்பது யாதென்று வினவ
பெண்களுக்கே உரித்த பண்பென்றேனடாநானும்!

பெண்மை அதை
சொல்லும் போதே அதில்
ஒரு மென்மை..
அந்த மென்மையும் பெண்மையில் ஒன்றே!

தாய்மை அதை
மிஞ்சியது தரணியில் ஏதடா?
அதுவும் ஒரு பெண்மை தானடா!
அச்சம்,மடம்,நாணம்,பயிர்ப்பு
அவையும் பெண்மை என்போரே!!

ஆனால்
அடியேன் அறிவேனடா
அன்று சொன்னாரே அண்ணல் பாரதி
“அச்சம் தவிர்” என்று..

பெண்ணே!
நீ உச்சம் தொட்டிட
அச்சத்தினை துச்சமாய் கருதிடு..
மடம் என்பது மடமை தானடா?
பேதை தகர்த்து மேதையானோர்.

எம்மில் எத்தனைப் பேரடா!
அதில் பெண்களும் உண்டடா!
எதற்கடா எம் மங்கைக்கு மடமை??
பெண்ணென்பவள் மண்ணில் தோன்றிய
பொண்ணல்லவா..

பெண்மையென்பது
அவளைக் காத்திடும் கண்ணிமையல்லவோ..
பெண்களை மதித்து
பெண்ணியம் காத்து
புண்ணியம்
தேடுவோமே
என்றும்!!



என்.ஏ. மஹ்மூத், மடவளை

## நினைவுகளைத் தேடி...

நடவண்டி உருட்டி - பாதங்கள் வலிக்க
தேய்ந்து கிடக்கும் - பாதைகள்

சுரக்காய் இழுத்து - சுண்டிப் பார்த்து
விளையாடும் - இறந்த கால
நாட்களை - இரை மீட்டும்
நிகழ் காலத்து இரவுகள்.

வேப்பை மரத்து நிழலில்
சிப்பி சிரட்டை வைத்து
சில்லுக் கோடும் சேர்த்து
சின்ன வயதில் விளையாடியது
நெஞ்சுக்குள் நிறைந்து கிடக்கிறது

அனிங்கிப் பழம் பறிக்க
வேலாயுதம் மாமாவோடு
வெள்ளத் தம்பியும் கூட வருவான்
சொண்டாம் பழமும்
நொண்டாங்காய் பிஞ்சும்
இப்பொழுதும் நாவை
ருசி பார்க்கும்.

மரியம் கன்னாவின் வீட்டில்
பாலும் பழமும் குடிக்க
கியுவில் நின்ற பொழுதுகள்

குளத்தில் குளித்து - சுங்கான் மீன் பிடித்து
கூட்டாஞ் சோறு சமைத்து - குதூகலமாய்
துள்ளித் திரிந்த - பருவத்து காலங்கள்

நடுராத்திரியில் - வாப்பாவோடு வயலுக்குச்
சென்று
கும்மிருட்டுக்குள் - யானைக் காவல் பார்த்த
பசுமையான நாட்கள்.

உம்மாவின் முந்தானையிலும்
காலங்களை கழிப்பதில்
ஒரு சுகம் இருந்தது - தூக்கத்திலும்
துரத்தி விளையாடும் கனவுகள்
வரிசைக் கிரமமாக வரும்

இலுப்பை மரத்து ஊஞ்சலில்
இதமாய் கழியும் நாட்கள்
இப்பொழுதெல்லாம்
இனிமைகளை
தொலைத்துவிட்டு
வெறுமைகளை
பிரசவிக்கும்
காலப் பொழுதுகள்

மூதூர் இ.நளீம்




உங்களது
கவிதைகளையும்
இப்பக்கத்தில் பிரசுரிக்க
விரும்பினால்
கீழுள்ள
WhatsApp இலக்கத்திற்கு
உங்கள் புகைப்படத்துடன்
எமக்கு அனுப்பி வைக்கவும்.
077 1663140




தொகுப்பு :
ஏ.எம். ரம்சான்
HND in Computing



**இந்த விஷயம் உங்களுக்கு தெரிந்தால் உடனே முதலீடு செய்வீர்கள்!**

கிரிப்டோ கரன்சி என்ற வார்த்தையை நாம் சமீபகாலமாகக் கேட்டு வருகிறோம். இருப்பினும், இன்னும் நம்மில் சிலருக்கு இந்த கிரிப்டோ கரன்சி என்பது எப்படிச் செயல்படும் என்பதே தெளிவாக இல்லை. இன்னும் சிலருக்கு இந்த கிரிப்டோ கரன்சி நாணய வடிவத்தில் வருவதாக நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். உண்மையிலேயே இந்த கிரிப்டோ கரன்சி பணத்தை மக்கள் எப்படி பயன்படுத்தலாம்? இது எப்படிப் பணமாகச் செயல்படுகிறது? உலகளவில் இதற்கு எங்குச் சென்றாலும் மதிப்புள்ளது என்று கூறுகிறார்களே, இது உண்மையா?

**கிரிப்டோ கரன்சி என்றால் என்ன?**

முதலில் கிரிப்டோ கரன்சி என்றால் என்ன என்பதைப் பார்த்துவிடலாம். கிரிப்டோ கரன்சி என்பது மெய்நிகர் நாணயம் ஆகும்.

கிரிப்டோ கரன்சியானது டிஜிட்டல் முறையில் கிடைக்கும் பணமாக செயற்படுகிறது. கிரிப்டோ கரன்சி என்ற பெயர் குறிப்பிடுவது போல், இந்த கிரிப்டோ கரன்சி பயணமானது என்கிரிப்டெட் செய்யப்பட்ட தொழில்நுட்பத்தால் உருவாக்கப்படுவதாகும். இது டிஜிட்டல் பணம் என்றும் அழைக்கப்படுகிறது.

அமெரிக்காவின் டாலர் மற்றும் இந்தியாவின் ரூபாயைப்போல் இதற்கும் மதிப்புள்ளது.

**பிட்காயின் இன் இந்திய மதிப்பு என்ன?**

கிரிப்டோ கரன்சி (Bitcoin, Ethereum, Dogecoin, Litecoin, Ripple) போன்று பல வகை பணமாகப் பயன்படுத்தப்படுகிறது. இதில் அதிக மதிப்பு எந்த கிரிப்டோ கரன்சிக்கு கிடைத்துள்ளது என்று பார்த்தால், அது பிட்காயினுக்கு தான் கிடைக்கிறது. இலங்கை மதிப்பின் படி 1 பிட் காயின் என்பது ரூ. 12,604,080.58/- சமமாகும்.

கிரிப்டோ கரன்சி மூலம் செய்யப்படும் ஒவ்வொரு பரிவர்த்தனையும் டிஜிட்டல் கையொப்பத்தால் சரிபார்க்கப்படு கிறது. இது டிஜிட்டல் பணம் என்பதனால், இது பாதுகாப்பானதா என்று கேள்வி உங்களுக்கு எழுந்திருக்கும்.

**கிரிப்டோ கரன்சி என்பது உண்மையில் பாதுகாப்பானதா?**

உண்மையைச் சொல்லப் போனால், கிரிப்டோ கரன்சி என்பது மிகவும் பாதுகாப்பான நாணயம் தான் என்பதை முதலில் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். கிரிப்டோ கரன்சி முழுமையாக பிளாக் செயின் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்படுகிறது.

இது முழுமையாக என்கிரிப்ட்டு செய்யப்பட்ட நாணயம் என்பதனால் இதை பெறுபவர் மற்றும் அனுப்பு பவர் மட்டுமே அணுக முடியும். இதனால் இதன் பாதுகாப்பைப் பற்றி மக்கள் பயப்படத் தேவையில்லை.

**மிகவும் விலை குறைவான கிரிப்டோ கரன்சியின் மதிப்பு எவ்வளவு?**

கிரிப்டோ கரன்சி என்பது நாம் முன்னர் சொன்னது போல இது ஒரு டிஜிட்டல் பணமாகும். இதனால், கிரிப்டோ கரன்சியை நோட்டுக்களாகவோ, நாணயமாகவோ அச்சடிக்க முடியாது.

இருப்பினும் இதை நீங்கள் மிகவும் பாதுகாப்பான டிஜிட்டல் லாக்கரில் இவற்றை நீங்கள் சேமித்து வைத்துப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

எனவே, கிரிப்டோ கரன்சியை அதன் அடிப்படை வடிவமான இணைய வடிவ வாயிலாக மட்டுமே பயன்படுத்த முடியும்.

கிரிப்டோ கரன்சி விலை அதிகமானது என்று நினைத்துவிடாதீர்கள், இலங்கை ரூ. 14.76 விலை முதல் கிரிப்டோ கரன்சி வாங்கக் கிடைக்கிறது.

**உலகளவில் நீங்கள் எங்கெல்லாம் இந்த கிரிப்டோ கரன்சியை பயன்படுத்தலாம்?**

கிரிப்டோ கரன்சி பரிவர்த்தனை மற்றும் தகவல்களை யாராலும் ஹேக் செய்யவோ, ஏமாற்றவோ முடியாது என்பதை மறக்காதீர்கள்.

இது தற்போது மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. கிரிப்டோ கரன்சி சமீபத்தில் மக்களின் கூடுதல் நம்பிக்கையைப் பெற்றுவருகிறது என்று சமீபத்திய அறிக்கை முடிவுகள் தெரிவிக்கிறது. உலகளவில் நீங்கள் எங்கு வேண்டுமானாலும் கிரிப்டோ கரன்சியை பயன்படுத்திக் கொள்ளலாம். இதை பொதுவான பணம் போல வருடத்தில் அனைத்து நாட்களும் பயன்படுத்தலாம்.

---

**நூல் அறிமுகம்**




**வாசிப்பு ஒரு வாழ்க்கை முறை**

ஆசிரியர் :
கலாநிதி ராகிப் சிர்ஜானி

தமிழில் :
ஏ. டபிள்யு. எம். பாஸிர்

வெளியீடு :
பாதிஹ் வெளியீட்டகம்

வகை :
கட்டுரைத் தொகுப்பு

வெளியீட்டு ஆண்டு:
2021 செப்டம்பர்

விலை : 300/=

**நூல்களைப் பெற்றுக் கொள்ள :**

Online Matur Library

0771020030
0750545536




**அசன்பேயுடைய கதை**

ஓர் மீள் வாசிப்பு

ஆசிரியர் :
அ. வா. முஹ்ஸீன்

வெளியீடு :
வள்ளாப்பு வளி

வகை :
நாவல்

வெளியீட்டு ஆண்டு:
2021 நவம்பர்

விலை : 300/=

# ICC World Cup




## T20 - 20
## கிரிக்கட் போட்டி ஒரு பார்வை



தொகுப்பு : சிராஜ் ஹக்கீம்

கிரிக்கட் விளையாட்டின் மூன்றாவது பரிணாமமாக இருக்கும் 20-20 கிரிக்கட் போட்டிகளுக்கு வித்திட்ட நாடு நியுசிலாந்து ஆகும். 1990 காலப்பகுதியில் குறுகிய ஓவர்கள் கொண்ட உள்ளூர் கிரிக்கட் போட்டிகள் நியூசிலாந்தில் விளையாடப்பட்டு இருக்கின்றன.

ஆனால் 20-20 என்று கிரிக்கட் விளையாட்டை ஒரு புதிய கோணத்தில் அறிமுகம் செய்தது இங்கிலாந்து கிரிக்கட் போர்ட் ஆகும். 2003ம் ஆண்டு காலப்பகுதியில் இங்கிலாந்தின் உள்நாட்டு கழகங்களுக்கு இடையில் 20-20 கிரிக்கட் போட்டிகள் மிகவும் பிரசித்தி பெற்ற ஒன்றாக மாறத் தொடங் கியது. இதனை தொடர்ந்து நியூசிலாந்து, அவுஸ்திரேலியா, மேற்கிந்திய தீவுகள் என்ற சில நாடுகளும் தங்கள் நாட்டில் உள்நாட்டு கழகங்களுக்கு இடையில் 20-20 விளையாட்டை அறிமுகம் செய்தன.

சர்வதேச கிரிக்கட்டில் முதன்முறையாக இங்கிலாந்து நியூசிலாந்து பெண்கள் அணிகளுக்கு இடையில் 05/08/2003 அன்று நடந்த 20-20 போட்டியில் நியூசிலாந்து பெண்கள் அணி 9 ஓட்டங்களினால் வெற்றி பெற்றது.

இதைத் தொடர்ந்து ஆண்கள் பிரிவில் முதல் சர்வதேச 20-20 போட்டி Australia vs New Zealand அணிகளுக்கு இடையில் நடைபெற்றது.

17/05/2005 இல் ஆஸ்திரேலிய எள நியூசிலாந்து அணிக ளுக்கு இடையில் நடந்த முதல் சர்வதேச போட்டியில் ஆஸ்தி ரேலிய அணி வெற்றிபெற்றது.

இவ்வாறாக 20-20 போட்டிகளுக்கு உலகம் பூராகவும் ஆதரவு பெருகிவருவதை அவதானித்த சர்வதேச கிரிக்கட் பேரவை (ICC) 2007ம் ஆண்டு முதன்முறையாக 20-20 உலகக் கிண்ண போட்டி தொடர் ஒன்றை அங்குரார்ப்பணம் செய்து வைத்தது. 3 மணி நேரத்தில் போட்டி முடிவுறும் வாறு இந்த 20-20 போட்டிகளை வடிவமைத்தது. (முதல் பாதி 90 நிமிடங்கள் 10 நிமிடம் இடைவேளை இரண்டாவது பாதி 90 நிமிடங்கள்) இப்போட்டிகள் தென்னாப்பிரிக்காவில் நடைபெற்றன. 12 நாடுகள் பங்குகொண்ட இத்தொடரில் இறுதிப்போட்டிக்கு இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் தேர்வாகின.

இறுதிப்போட்டியில் முதலில் துடுப்பாடிய இந்திய அணி 157 ஓட்டங்களை பெற்றது. பின்னர் துடுப்பாடிய பாகிஸ்தான் அணி சகல விக்கட்டுகளையும் இழந்து 152 ஓட்டங்களை பெற்றது. 5 ஓட்டங்களால் வெற்றிபெற்ற இந்திய அணி முதலாவது 20-20 உலககிண்ண சாம்பியனாக தேர்வாகியது.

இதனை தொடர்ந்து 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை 20-20 உலகிண்ண போட்டிகளை நடாத்துவது என்று ICC முடிவு செய்தது.

அதற்கிணங்க 2009ம் ஆண்டு இரண்டாவது 20-20 உலகக் கிண்ண தொடர் இங்கிலாந்தில் நடைபெற்றது. மொத் தமாக 12 அணிகள் பங்குகொண்டன. இதில் பாகிஸ்தான் மற்றும் இலங்கை அணிகள் இறுதிப்போட்டிக்கு தேர்வாகின. இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பாடிய இலங்கை அணி 138/6 ஓட்டங்களை பெற்றது.

பதிலுக்கு துடுப்பாடிய பாகிஸ்தான் அணி 2 விக்கட் இழப்பிற்கு 139 ஓட்டங்கள் பெற்று வெற்றிபெற்றது.

2010ல் மேற்கிந்திய தீவுகளில் நடைபெற்ற மூன்றாவது தொடரில் கிரிக்கட்டின் தாயகமான இங்கிலாந்து அணி இறுதிப்போட்டியில் அவுஸ்திரேலிய அணியை வெற்றிகொண்டு கிண்ணத்தை சுவீகரித்தது.

2012ம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற நான்காவது தொடரில் இலங்கை மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணி இறுதிப்போட்டிக்கு முன்னேறி இருந்தன. இதில் மேற்கிந்திய தீவுகள் அணி இலங்கை அணியை வெற்றிகொண்டு கிண்ணத்தை கைப்பற்றியது.

2014ம் ஆண்டு பங்களாதேஷில் நடைபெற்ற ஐந்தாவது தொடரில் இறுதிப்போட்டியில் இந்தியா மற்றும் இலங்கை அணிகள் பங்குகொண்டு அதில் முதன்முறையாக இலங்கை அணி கிண்ணத்தை கைப்பற்றியது...

2016ம் ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற ஆறாவது தொடரில் இங்கிலாந்து மற்றும் மேற்கிந்திய தீவுகள் ஆகிய இரண்டு அணியும் இரண்டாவது முறையாக இறுதிப்போட்டிக்கு தேர்வாகி இருந்தன. இதில் மேற்கிந்திய தீவுகள் வெற்றிபெற்று இரண்டாவது முறையாக சாம்பியன் ஆனது.




சுமார் ஐந்து வருட இடைவெளிக்கு பிறகு இவ்வாண்டு 2021ல் அமீரகத்தில் (UAE) நடைபெற்ற ஏழாவது தொடரில் இறுதிப் போட்டிக்கு அவுஸ்திரேலியாவுடன் முதன்முறையாக நியூசிலாந்து அணி மோதியது. பலத்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பாடிய நியூசிலாந்து அணி 172/4 ஓட்டங்களை பெற்றது.

அணித்தலைவர் கான் வில்லியம்சன் அதிக பட்சமாக 85 ஓட்டங்களை பெற்றார். பதிலுக்கு துடுப்பாடிய அவுஸ்திரேலியா 2 விக்கட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. சிறப்பாக துடுப்பாடிய மிட்சல் மார்ஸ் 77* ஓட்டங்களைப் பெற்றார். 20-20 வரலாற்றில் முதன்முறையாக அவுஸ்திரேலிய அணி கிண்ணத்தை சுவீகரித்தது.

எட்டாவது 20-20 உலகக்கிண்ண தொடர் அடுத்த வருடம் (2022) ஒக்டொபர் மாதத்தில் அவுஸ்திரேலியாவில் நடைபெற இருக்கிறது.

ICC MEN'S T20 WORLD CUP 2021

எம்.எஸ்.எம். பிஸ்ரி
BBA, PGDE



# ஒல்லாந்தர் காலத்து VOC நாண யங்கள், வெண்பளிங்கு கோப்பைகள்.
# மூதூர் மக்கள் பயன்படுத்திய ஒல்லாந்தர் காலத்து கிழக்கிந்தியக் கம்பனியின் VOC நாணயங்கள், வெண்பளிங்கு கோப்பைகள்.



இரத்தினத்துவீபம், செரண்டிப், செலான், சிலோன், இலங்கை, சிறீலங்கா, இந்து சமுத்திரத்தின் முத்து, தாமிர பரணி, தப்ரபேன் போன்ற இன்னும் பல வேறு பெயர்களால் அந்நிய ஆட்சியாளர்களாலும், இலங்கையர்களாலும் அழைக்கப்பட்டு வந்த இயற்கையின் எழில்கொஞ்சும் உலகின் சொர்க்காபுரி என்று வர்ணிக்கப்பட்ட நம் தாய்த்திரு நாடு இலங்கை 1505 ம் ஆண்டிலிருந்து 1948 வரை சுமார் 443 வருடங்கள் போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர்களால் ஆட்சி செய்யப்பட்டு வந்துள்ளது. இலங்கையை முதலில் ஆட்சிசெய்த போர்த்துக்கீசர்கள் (1505-1658 வரை) சுமார் 153 வருடங்கள் ஆட்சி செய்தார்கள், பின்னர் ஒல்லாந்தர்கள் (1658-1796 வரை) சுமார் 138 வருடங்களும், ஆங்கிலேயர்கள் (1796 - 1948 வரை) சுமார் 152 வருடங்களும் ஆட்சிபுரிந்தார்கள்.

### ஒல்லாந்தர் ஆட்சிக் காலம்

ஒல்லாந்தர்கள் 1658 ஆம் ஆண்டு இலங்கையை போத்துக்கீசர்களிடம் இருந்து கைப்பற்றி 1796 ஆம் ஆண்டு வரை சுமார் 138 வருடங்கள் இலங்கையை ஆட்சிசெய்த போது அரச, நிர்வாக மற்றும் வர்த்தக நோக்கங் களிற்காக "கிழக்கிந்தியக் கம்பனிகள்" ஒன்றை ஆரம்பித்து நிருவாகம் செய்து வந்தனர். இதன் குறியீட்டு அடையாளமாக அரச ஆவணங்கள், கட்டிடங்கள், நாணயங்கள் போன்றவற்றில் VOC என்ற குறியீட்டை பயன்படுத்தி வந்தனர்.

### VOC என்றால் என்ன

VOC என்பது ஒல்லாந்து நாட்டவர்களின் டச்சு மொழியின் வடிவமாகும். இது Verenidge Oost indische Compagnie என்ற டச்சு (Dutch) மொழியின் ஆரம்ப எழுத்துக்களைக் கொண்ட வடிவமே VOC என்பதாகும்.

- தமிழில் : கிழக்கிந்திய கம்பனிகள் எனவும்,
- ஆங்கிலத்தில்: United East indies Companies

எனவும் அழைக்கப்பட்டது.

இக்குறியீடு ஒல்லாந்தர் காலத்து அரச நிருவாக கட்டிடங்கள், ஆவணங்கள், காணிப் பத்திரங்கள், செம்பு முத்திரைகள், நாணயங்கள், வெண் பளிங்குக் கோப்பைகள், குளிர்பான போத்தல்கள், அரச அங்கிகளில் அணியும் பொத்தான்கள் போன்றவைகளில் பொறிக்கப்பட்டிருந்தன. இக்குறியீடே ஒல்லாந்தர்களின் ஆட்சிக்கான சின்னமாகக் காணப்பட்டது.

### ஒல்லாந்தர் காலத்தில் கொட்டியாபுரத்தில் முஸ்லிம் வணிகர்கள்.

இலங்கையில் மேற்குக் கரையோரத் துறைமுகங்களை விடவும் கொட்டியாரத் துறைமுகத்திற்கே அதிகளவு வணிகக் கப்பல்கள் வந்து சென்றுள்ளன. வாசனைத் திரவியங்கள், முத்துக்கள், செங்கற்கள், நாட்டோடுகள், யானைத் தந்தம், பெறுமதியான மரங்கள், நெல், பாக்கு, துணி போன்ற வணிகங்களில் செட்டிமார்களும், முஸ்லிம்களும் அதிகளவில் ஈடுபட்டனர்.

கிழக்கிந்திய கம்பனிகளின் வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களின் கேந்திர நிலையமாக திருகோணமலை துறைமுகம், கொட்டியாரத் துறைமுகம் என்பன காணப்பட்டதால் கொட்டியாரத்தில் வசித்து வந்த மக்களும் ஒல்லாந்தர்களின் VOC அடையாளம் பொறிக்கப்பட்ட நாணயங்களைப் பயன்படுத்தினார்கள்.

### ஒல்லாந்தர்கள் இலங்கையில் கட்டிய முதலாவது கோட்டை கொட்டியாரக் கோட்டை

கொட்டியாரக் கோட்டை (Kottiyar Fort) என்பது இலங்கையில் கட்டப்பட்ட கோட்டைகளுள் ஒன்றாகும். இதுவே ஒல்லாந்தர்களால் இலங்கையில் கட்டப்பட்ட முதலாவது கோட்டை ஆகும். இது கொட்டியாரக் குடாவின் தெற்குப் பகுதியில் 1622 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இது தி/மூ/மூதூர் மத்திய கல்லூரி (தே.பா) அமைந்துள்ள இடமாகும்.

போர்த்துக்கேயரை இலங்கையிலிருந்து முற்றாக விரட்டுவதற்காக ஒல்லாந்தருடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கு அமைவாக கண்டி மன்னன் செனரத் மூதூர் எனும் இடத்தில் கோட்டை ஒன்றை அமைப்பதற்கு அனுமதி பெற்றிருந்தான். எனினும் அவனால் கட்டப்பட்டுக் கொண்டிருந்த இக் கொட்டியார் கோட்டையானது போர்த்துக் கேயரால் அரைவாசியிலேயே இடிக்கப் பட்டது. பின்னர் ஒல்லாந்தர்களால் போர்த்துக்கேயர்கள் தோற்கடிக்கப்பட்டதும் மீண்டும் கொட்டியாரக் கோட்டை 1658 ஆம் ஆண்டில் கட்டப்பட்டது.

ஒல்லாந்தர்களால் வரையப்பட்ட கொட்டியாரக்குடா வரைபடத்தில் கொட்டியாரம் என்பதற்கு COTJAR என்று குறிப் பிடப்பட்டுள்ளது.

### மூதூர் மக்களிடம் VOC நாணயங்கள் வெண்பளிங்கு கோப்பைகள்.

மூதூரில் ஒல்லாந்தர்கள் கோட்டை அமைத்து (1658-1796 வரை) சுமார் 138 வருடங்கள் ஆட்சி செய்து வந்தமையினால் வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களுக்கு பயன்படுத்தப்பட்ட VOC நாணயங்கள் இலங்கை முழுவதும் பரவலாகக் காணப்பட்டாலும், மூதூர் மக்களிடம் அதிகம் காணப்பட்டன. 1796 ஆம் ஆண்டுடன் ஒல்லாந்தர் ஆட்சி நிறைவுக்கு வந்தாலும் இன்றுவரை (2021) சுமார் 225 வருடங்கள் கடந்தாலும் ஒரு பாரம்பரிய சொத்தாக பெட்டகத்தில் வைத்துப் பாதுகாத்து வந்திருக்கின்றார்கள்.

VOC பொறிக்கப்பட்ட நாணயங்கள், வெண்பளிங்கு கோப்பைகள், செம்பு முத்திரைகள், ஆவணங்கள் குளிர்பான போத்தல்களை ஆதாரமாகக் கொண்டு ஒல்லாந்தர் காலத்தின் போது மூதூரில் மக்கள் வாழ்ந்திருக்கின்றார்கள் என்பதை உறுதிப்படுத்த முடியும்.

ஆனால் 1981 ஆம், 2000 ஆம் ஆண்டுகளில் பழைய பொருட்கள் வாங்கும் வியாபாரிகள் அதிகம் விலை கொடுத்து பெரும்பாலான பொருட்களையும், VOC நாணயங்களையும் மூதூரிலிருந்து வாங்கிச் சென்று விட்டனர்.

2021 ஆம் ஆண்டிலும் VOC நாணயங்கள் மற்றும் ஒல்லாந்தர் காலத்து முத்திரை பொறிக்கப்பட்ட காணிப் பத்திரங்களை வாங்கி விற்பதற்கும் முயற்சிகள் நடைபெற்றன. அதிக விலைக்கு விற்பனை செய்வதற்கு நாங்கள் விரும்பினாலும், மறைமுகமாக மூதூர் மக்களின் பழமையான பொருட்கள் சகலதும் விற்கப் பட்டு விட்டால் மூதூர் மக்களின் நீண்ட கால இருப்புக்கான வரலாற்று ஆதாரங்கள் இன்றி நமது எதிர்கால சந்ததியினர் தவிக்க நேரிடும்.

எதிர்காலத்தில் நமது பரம்பரையினர் ஒல்லாந்தர் காலத்தின்போதும் மூதூரில் நமது மூதாதையர்கள் வாழ்ந்ததற்கான வரலாற்று ஆதாரங்களை தேடிக் கொண்டிருப்பார்கள் என்பது நிச்சயம்..



**Buhari Naleer**
Dip in Journalism

# 2021 நவம்பர் 23
# குறிஞ்சாகேணி படகு விபத்து



**2021 நவம்பர் 23** திகதி செவ்வாய்க் கிழமை அன்று குறிஞ்சாகேணியில் படகு விபத்தில் ஆறு உயிர்களை ஆறுபறித்துக் கொண்டது இந்த சம்பவம் கிண்ணியாவில் மட்டுமல்லாமல் முழு இலங்கையையும் சோகத்தில் ஆழ்த்தியது.

பாடசாலைக்கு வெள்ளை ஆடை அணிந்து சென்றவர்களை சில நிமிடத்துக்குள் அவர்களை முழுமையான வெள்ளை ஆடை அணிய வைத்து மண்ணறையில் வைத்த சம்பவம் எல்லோருடைய நெஞ்சையும் உலுக்கியது அன்றைய நாள் கிண்ணியாவிற்கு கருப்பு நாள் என்று சொல்லலாம்.

பிள்ளைகளின் இலட்சியங்கள் கனவுகள் மட்டுமல்ல ஆசிரியர் முதியோரின் பெற்றோர்களின் கனவு சில நொடிகளில் கனவாகவே மாறிவிட்டது பிள்ளைகளின் நண்பர்கள் பெற்றோர்கள் உறவினர்களின் ஏக்கங்களும் கவலைகளும் நீடிக்கவே செய்யும்.

ஆசிரியரின் தியாகம் வயோதிபரின் அர்ப்பணிப்பு தியாகங்கள் நாம் எல்லோரையும் மெய்சிலிர்க்க வைத்தது இருந்தும் இறைவன் பிள்ளைகளை அழைத்துக் கொண்டான்.





ஆனால் பின்னணியில் மக்களின் படிப்பினை பொறுப்புடைமையை பார்ப்பதற்காவும் புரிந்து கொள்வதற்காகவுமே.

உயிரோடு யாரும் இருக்கப் போவதில்லை ஆனால் இருக்கும்போது நாம் நமக்கு என்ன, பிறருக்கு என்ன நன்மை செய்தேன் என்பதை விட நான் பிறருக்கும் எந்த வகையில் தீங்கிழைத்துக் கொள்கிறேன் என்பதை நாம் பார்க்க வேண்டும் மரணித்த உயிர்கள் யாரால் நடந்தது? எப்படி நடந்தது? எதனால் நடந்தது? ஏன் நடந்தது? இப்படிப்பட்ட கேள்விக்கு பதில் பொறுப்பு, கடமையில் இருப்பவர்கள்தான் காரணம்.

ஒருவரை ஒருவர் குற்றம் சொல்லாமல் காரணங்களை தேடி எடுத்து வைக்காமல் இனி யாவது பாலத்தை பூர்ணமாக முடிப்பதற்கு அர்ப்பணிப்பு செய்யுங்கள். தலைமைக்கு அபிவிருத்தி, பிரச்சனைகள் எவ்வாறான வடிவில் வந்தாலும் அதை தாங்கக்கூடிய எதிர்த்து நிற்கக் கூடிய கடமை, பொறுப்பு, துணிவு, தைரியம், அறிவு, ஆளுமை இருக்கவேண்டும் உயிர் போனால் கூட கடமை பொறுப்புக்கு கலங்கம் இருக்கக்கூடாது.

இறைவனும் மக்களும் கேள்வி கேட்கும் போது பதில், ஆதாரம் நம்மிடம் இல்லை இல்லையென்றால் நானும் சக மனிதன் போல் தான் என்ற வார்த்தை வரும். அப்படியானால் அந்த உயர்பதவி தலைமைக்கு போகாதீர்கள் நீங்கள் தகுதியற்றவர்கள். நான் பொறுப்பு எடுத்துக்கொள்கின்றேன் என்று கேட்டதற்கு இணங்கத்தான் உங்களை பதவியில், தலைமையில் அமர்த்தி உள்ளார்கள் மக்கள்.பணம் இருப்பவர்கள் மீது தர்மம் கடமை. அதே போல் தலைமைத்துவத்தின் மீது மக்களின் ஒருவரின் தேவை, ஒரு குற்றமாக இருந்தாலும் அவர்களின் பொறுப்பாகிறது அதை நிவர்த்தி செய்வது உங்களின் கடமை.

ஒரு கொலையை தெரிந்து செய்தால் அதை ஒப்புக் கொண்டால் அதற்கான தண்டனை கிடைக்கும் ஆனால் அலட்சியமாக செய்கின்ற சந்தர்ப்பத்தில் பல உயிர் மரணித்த குறிஞ்சாகேனி பாலங்கள் போன்று எத்தனையோ இருக்கலாம். நடந்தவை நடக்கப் போகின்ற எல்லாம் உங்களுக்கு பொறுப்புதான் இதை தவறு என்ற பட்சத்தில் அதற் கான உங்களுக்கு ஏதாவது வடிவில் வினை காத்திருக்கிறது என்பதை மறவாதீர்கள்.

இந்தப்பாதையில் 06 பேர்களின் உயிரிழப்புகளும் பாலத்தில் கல்வெட்டில் பதிக்கப்படலாம். ஆனால் இந்தப் பாதையில் செல்லும் போதெல்லாம் இவர்கள் நினைக்கப்படுவார்கள் நினைக்கும் போதெல்லாம் இதனால் அவருக்கு சாபமிடலாம் இச்சாபம் இதற்கு காரணமானவர்களுக்கு போய்ச்சேரும் என்பது நியதி.

பொறுப்பும் கடமையும் மேலிருந்து கீழ் அல்லது கீழிருந்து மேல் செல்லும் இதற்கு பொறுப்புதாரிகள் ஒவ்வொரு வருக்கும் கடமையாகும். எதிர் காலத்தினை வடிவமைப்பதற்காக பொறுப்புகளும் கடமைகளும் சுமப்பதற்காக கல்வியைத் திருடச் சென்ற பிள்ளைகளிடம் நாம் அவர் களின் உயிரை திருடி இருக்கின்றோம்.

இதே போன்று இன்னொரு தவறை செய்து விடாதீர்கள் அதுதான் வேத தீவு பாலம். வெள்ளம் வருவதற்கு முன் அணை கட்ட வேண்டும்.

ஒரு தவறை செய்துவிட்டோம் இன்னொரு தவறை செய்யாமல் இருப்போம் பொறுப்பில் அமர்த்திய அவர்கள்தான் அதில் பிரயாணம் செய்யப் போகின்றார்கள் அவர்கள் வாழ்க்கை தரத்தை உயர்த்த போராடுகின்றார்கள். பொறுப்பில் இருக்கின்ற நீங்கள் தான் அதை செய்து முடிக்கவேண்டும்.

இது வேறு ஒருவருடைய பொறுப்பு என்று நீங்கள் அதை கைவிட்டு விடாதீர்கள்.

பொறுப்பில் இருக்கின்ற எல்லோரும் உங்களது கடமை நீங்களும் அதில் பங்கெடுத்துக் கொள்ளுங்கள். உங்களை பதவியில் அமர்த்திய குடும்பம் அந்த பாலத்தில் செல்லலாம். எனவே இரண்டு பாலங்களையும் மிகத் தீவிரமாக முயற்சி செய்து அதனை நிவர்த்தி செய்து கொடுங்கள். ஒரு தலைமை செய்கின்றது என்பதை அவதானித்து அதோடு விட்டு விடாமல் நீங்களும் கண்காணித்து உங்கள் பங்களிப்பையும் முழுமையாக வழங்குங்கள்.

> **“மக்களே காலம் கடந்து செல்கின்ற போது மரணத்துக்கு காரணம் அவர்க ளுக்கு நீந்தத் தெரியாது, அவர்கள் விழுந்த இடம் சதுப்புநிலம், அவர்களின் கனமான புத்தகப் பைகள் என்று சொல்லிவிடாதீர்கள்.”**

முத்திதழ் சார்பாக மரணித்தவர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

1. அப்துல் மஜீத் சேகப்துல் காதர் (ஆண் வயது 70) குறிஞ்சாக்கேணி
2. பாலசுந்தரம் சப்ரினா (கர்ப்பிணித் தாய் பெண் வயது 33) - பாலர் பாட சாலை ஆசிரியர் குறிஞ்சாக்கேணி.
3. சதாத் சௌகீத் (ஆண் வயது 04 குறிஞ்சாக்கேணி)
4. நுபாஸ் பாத்திமா சீரின் (பெண் வயது 08 குறிஞ்சாக்கேணி)
5. நுபாஸ் சஹ்லா (பெண் வயது 07 குறிஞ்சாக்கேணி)
6. பாரிஸ்தீன் முஹம்மது பகீத் (ஆண் வயது 06 குறிஞ்சாக்கேணி)
7. பாத்திமா நபா (வயது 09 - பெண்)



வேதத்தீவு, மூதூர்.



# முகநூல் முற்றத்தில்






## மனச் சிறகுகள் விரியட்டும்...

நீ பேசும் மொழி கேட்பதற்கு இனிமையா
கவும், அடுத்தவரின் மனத்தை ஆளும்
வல்லமை கொண்டதாகவும் இருப்பின்...
பேசு..
வார்த்தைகளை தர்மம் செய்...
மனக் காயங்களுக்கு மருந்திடு....
ஆலோசனை வழங்கு...
அடுத்தவர் மனங்களை வெற்றி கொள்...
கவலைகளைப் போக்கிடு..
கை நிறையக் காசுண்டு, கடனில்லா
வாழ்வுண்டெனின் ..

கஷ்டத்தில் உலவும் ஏழையின் கண்ணீர்
துடைக்க கரம் கொடு.
மனிதம் உன்னை ஆளுகின்றதெனில்
எதிரே வருவோரைப் பார்த்துப் புன்ன
கைக்கக் கற்றுக் கொள்..

எதிர்மறைச் சிந்தனைகளின் சிறகுடைத்து
, எதையும், எவரையும் - அதனதன்,
அவரவர் இடத்தில் இருந்து புரிந்து
கொள்ள முயற்சி செய்.
மனதால் மனிதனை நேசிக்கக் கற்றுக்
கொள்.. மனிதனாய் வாழ்ந்து, மனிதனா
கவே மரணம் தழுவு..




## இருளின் மௌனம்

இருளின் மௌனத்தில்
மிதந்திடும் கதகதப்புகள்
சொல்லும் இராக்கதைகள்
ஆன்மாவில் ஊறிப்போகிறது...

மெய்யாகவே கனவாகிப்போனதின்
நிகழ்கால விம்பம்
கானகத்தில் பெய்திடும் ஒரு
மழையில் தேங்கிக் கிடக்கிறது...

குளிர்களின் கண்ணீர்கள்
மிதந்துகொள்ளும் பேராற்றில்
நான் தனித்து நிற்கிறேன்
ஆன்மாவின் அங்கலாய்ப்புகள்
பட்சிகள் மயானத்தில்
மேள சங்குகள்...

நேற்று சேர்த்து வைத்த
நாளைய எண்ணங்களில்
இறந்துபோன காலங்கள்
ஆட்சி செய்கிறது...

இப்போது விடிந்திடும்
அப்போது விடிந்திடும்
எல்லாம் பொழுதுக்குத்தான்...

உயிர் இன்னமும்
ஊசலாடுகிறது...




## மர்ஹூம் ஏ.எல். அப்துல் மஜீத்

இலங்கையில் நெஞ்சுறுதிமிக்க அரசியல் ஆளுமை மர்ஹூம் ஏ. எல். அப்துல் மஜீத் அவர்கள் மரணித்து 34 வருடங்கள் நிறைவு.

1932/11/15 ஆம் ஆண்டு கிண்ணியாவில் பிறந்த இவர் தனது மேற்படிப்பை இந்தியாவில் முடித்தார். தனது 27வது வயதில் அரசியலில் நுழைந்து 27 வருட காலங்கள் திருகோணமலை மாவட்டத்தின் அரசியல் ஆளுமையாக தடம் பதித்தார்.

மர்ஹூம் மஜீத் எம், பி. அவர்கள் 1960ம் ஆண்டு மூதூர் தொகுதியில் சுதந்திரக் கட்சியில் (Sri Lanka Freedom party) S L F A போட்டியிட்டு 12000 வாக்குகளைப் பெற்று பாராளுமன்றம் நுழைந்து, 1972ல் ஸ்ரீறிமா அம்மையாரின் அரசாங்கத்தில் தகவல் ஒலிபரப்பு பிரதி அமைச்சராகவும் இருந்தார்.

அந்தக்காலப்பகுதியில் முதன் முதலில் இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபனத்தில் முஸ்லிம் நிகழ்ச்சியை இரவு 8.30 மணிக்கு கொண்டு வந்த வராவார். இவர் தனது அரசியல் அதிகாரத்தைக் கொண்டு மாவட்டெங்கும் பல அபிவிருத்திக ளையும் புதிய குடியேற்றங்க ளையும் உருவாக்கிய சேவை நாயகனாவார்.

இவரின் கம்பீரமான பேச்சுத் திறமையால், இந்தியாவில் தமிழ் நாட்டில் நடைபெற்ற உலக தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் வைத்து இவரின் பேச்சினால் ஈர்க்கப்பட்ட அன்றைய தென்னிந்திய முதலமைச்சர் எம், ஜீ ராமச்சந்திரன் அவர்களினால் தொப்பியும் செருப்பு சோடியும் மூக்கு கண்ணாடியும் அன்பளிப்பாக வழங்கி கௌரவிக்கப் பட்டார். அந்தளவு நாவண்மையும் தமிழ் இலக்கிய புலமை மிக்கவராகவும் திகழ்ந்தார்.

முழு இலங்கைக்கும் நன்கு அறிமுகமான, குறிப்பாக கிழக்கிலங்கை மக்களின் வாழ்வியலுடன் இரண்டரக் கலந்த இவர் இலங்கை முஸ்லிம்களின் ஒட்டுமொத்த விடிவுக்குமாக உழைத்தவராவார்.

இவ்வாறாக, மூதூர் முதல்வரும் தகவல் ஒலி பரப்புத்துறை பிரதி அமைச்சரும் திருமலை மாவட்ட அரசியல் ஆளுமையுமாக திகழ்ந்த மர்ஹூம் ஏ.எல்.அப்துல் மஜீத் அவர்கள் 1987/11/13 அன்று இனம் தெரியாத கோழைத் தனமிக்க துப்பாக்கிதாரிகளினால் அவரது இல்லத்தில வைத்த சுட்டுக் கொலை செய்யப் படுகிறார்.

அன்றைய நாள்தான் திருகோணமலை மாவட்டத்தினது மக்களின் உரிமை காத்த ஒரு கம்பீரக் குரல் ஓய்வுற்ற நாள்.

அன்னாரின் சேவைகளை அல்லாஹ் பொருந்திக்கொண்டு உயர்ந்த சுவனத்தை பரிசளிப்பானாக!




## ஷஹீத்கள் (உயிர்த் தியாகிகள்)

"அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
ஒரு மனிதர் சாலையில் நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது சாலையில் முட்கிளை ஒன்றைக் கண்டு அதை அப்புறப் படுத்தினார். (அவரது இந்த நற்செயலை) அல்லாஹ் பெருமனதுடன் ஏற்று, அவருக்கு (அவர் செய்த பாவங்களிலிருந்து) மன்னிப்பு வழங்கினான். உயிர்த் தியாகிகள் (ஷஹீத்) ஐவர் ஆவர்:
1. கொள்ளை நோயால் இறந்தவர்
2. வயிற்றுப்போக்கால் இறந்தவர்
3. வெள்ளத்தில் மூழ்கி இறந்தவர்
4. இடிபாடுகளில் சிக்கி இறந்தவர்
5. அல்லாஹ்வின் பாதையில் (அறப்போரில்) உயிர்த் தியாகம் செய்தவர்.
இதை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(ஸஹீஹ் முஸ்லிம்: 3877, 3878)

**முகநூல் முற்றத்துவெளியில்**
**உங்கள் Facebook ஆக்கங்களும்**
**இடம்பெற விரும்புகின்றீர்களா...?**

**#Muththithal #mmv/fb**

**என்று #(Hastag) செய்யவும்.**



**மேலதிகத்**
**தொடர்புகளுக்கு :**
**Muththithal முத்திதழ்**
**என்ற fb Page**
**ஐ நாடவும்**

**facebook**

Proprioters :

Mr. N.M. Rowshan
Managing Director





Mr. N.M. Rowshan
Managing Director

EDU FREE

# EDU FREE ACADEMY

*Free Education on Everyone Hand*




Edu Free Academy

Edu Free Academy


edufreeacademy.lk@gmail.com

0757745624 / 0762547125 / 0752666166 / 0762666166


## மாணவர் சித்திரம்



M.I. Firas Ahamed
Neithal nagar,
muthur-01





M. B. Zakariyya
Grade -02
Najeeb A Majeed v. Mutur.






Nihas Fathima Nitha,
Nadutheevu, Mutur.





Sajith Sana Maryam
Grade - 05
An-Nahar Girls M.V





Hikama shajahan
Grade 4A
Aamina National Girls School




முத்திதழ் மாதாந்த சஞ்சிகையில் உங்கள் விளம்பரங்களும் இடம்பெற விரும்பினால் எம்மை அழையுங்கள்.

0771020030 / 075757505



MODERN CONSTRUCTION
& CONSULTANT (PVT) LTD
TRUST
BUILDERS
MODERN
PLANNING
3D MODELING
075 75 77685
எமது சேவைகள்
அனைத்து வகையான கட்டடங்களும் நிர்மாணிக்கப்படும்
முப்பரிமான. உட்புற வடிவமைப்பு
கட்டடக்கலை. கட்டமைப்பு வரைபடம்
திட்ட மதிப்பீடு தயாரித்து வழங்கப்படும்
பொறியிலாளர்.கட்டகக்கலைஞரின் ஆலோசனைகள்
076 78 63296
உங்களது கட்டடம் கீழ்வரும்
வசதிகளுடன் நிர்மாணிக்கப்படும்
தேர்ச்சி பெற்ற பொறியிலாளர்களின் ஆலோசனைகள்
துரிதமான கட்டுமானப்பணிகள்
தரமான கட்டடப்பொருட்கள்
அனுபவமுள்ள வேலையாட்கள்
நவீன அலங்கார வேலைத்திட்டம்
info@modern-const.com
www.modern-const.com
Modern Construction & Consultant Pvt Ltd
- Batticaloa Road, Mutur, Trincomalee -




BMS
CONSTRUCTION
& Building Materials Supplier
எமது நிறுவனத்தின் மூலம் உங்களது அழகிய வீடு மற்றும் தொழில் நிறுவனங்களின் வெளிப்புறத்தை மேலும் அழகுபடுத்திடுங்கள். இத்துறையில் பத்து வருடகால அனுபவம் கொண்டவர்கள் மூலமான பதிப்பித்தல் (Interlock Pavings) வேலைகள்.
பின்வரும் அழகிய வடிவங்களை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
4×8 bricks model
Arrow shape
I shape
Zig zag model
Hexagon Design
Colorado design
Diamond shape
Round Dumple shape
Square design
Cube design
Trihex groove design
வீடு மற்றும் தொழில் நிறுவனங்களின் முற்றங்களை அழகுபடுத்த அழையுங்கள்...
ஆறு மாதங்களுக்கான உத்தரவாதம் வழங்கப்படும்.
077-1167660 / 075-5310813
Within Trincomalee
(10×10 : 31,500 rs)
Out of Trincomalee
(10×10 : 33,500 rs)




Pearl Grand
RECEPTION HALL
PEARL GRAND
Moments made Perfect
More Than You Expected
PEARL GRAND
Beyond your Expectations
Newly Refurbished and Expanded Pearl Grand
With state of the Art Technology
Consisting of two story function halls
Separate halls to accommodate Gents and ladies functions
With the capacity to accommodate more than 1000 guests
Celebrate with grandeur at pearl grand Make unforgettable memories with our outstanding service
A perfect venue for a destination wedding
All Covid 19 precautions are strictly in place with MOH approval
Contact now to reserve your memorable events We are always on hand to assist with your perfect occasions
077 15 444 88 | 075 23 42 343
Pearl Grand
Knox Road, Mutur




Quality Mart
Modern Mens Wear & Kids Wear
Wedding Dress Collections
EMERALD
LAROUSSE
COSMATICS
MOOSE
VANTAGE
KIDSWARE
BABAYHUG
Quality Mart
வாழ்க்கைக்கோர் புது வடிவம்
N.RIHAN
077 15 444 88 | 075 60 26 304
Quality Mart
Batticaloa Road,Periyapalam,Mutur 05